இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/

மாதமிரு இதழ் — 436 ● 1993 ஜூலை 9 வெள்ளிக்கிழமை

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ட்ரொட்ஸ்கி

**புத்தகக் கண்காட்சி**

வெலிமட சூரிய படமாளிகை
யூலை 10, 11,

கேகாலை சென் மேரிஸ் கல்லூரி
யூலை 10, 11, 12

காலை 9 மணி — மாலை 5 மணி வரை

அமைப்பு:– 'தொழிலாளர் பாதை' வெளியீட்டாளர்கள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் – இளம் சோசலிஸ்டுகள்

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

# சோசலிச அனைத்துலகவாதத்தை பிரகாசமாக்குகின்றது

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25 வது ஆண்டு நிறைவு விழா ஜூன் மாதம் 27ம் திகதி அனைத்துலகக் குழு பிரதிநிதிகள் கலந்து கொண்ட சிறப்பு கூட்டம், கண்காட்சியுடன் கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் விமரிசையாக கொண்டாடப் பெற்றது.

விழாவில் பங்கு கொள்ள நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினதும் ஜேர்மன் கிளையான புன்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரினதும் (பீ. எஸ். ஏ.) சார்பில் அதன் தேசியச் செயலாளர் உல்ரிச் ரிபேர்ட் வாழ்த்துத் தெரிவிக்க வருகை தந்திருந்தார். இந்திய ட்ரொட்ஸ்கிச சோசலிச தொழிலாளர் கழகத்தின் சார்பில் வாழ்த்துத் தெரிவிக்க அதன் செயலாளர் அருண் குமார் விஜயம் செய்திருந்தார். அவருடன் இந்திய ட்ரொட்ஸ்கிச 'தொழிலாளர் பாதை' பத்திரிகை ஆசிரியர் என். ராமும் விழாவில் கலந்து கொண்டார். அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட அமெரிக்க வேர்க்கஸ் லீக்கின் தேசிய செயலாளர் டேவிட் நோர்த், அனைத்துலக குழுவின் அவுஸ்திரேலிய கிளையின் தேசிய செயலாளர் நிக் பீம்ஸ், பிரீத்தா

(2ம் பக்கம் பார்க்கவும்)

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் **25** வது ஆண்டு நிறைவு விழா




புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக 25வது ஆண்டு நிறைவு விழா மேடை

# விஜேதுங்க அரசாங்க இனவாத ஒடுக்குமுறை உக்கிரம்: விடுதலைப் புலிகள் தலைமை பிற்போக்கு உறவுக்கு துடிக்கின்றது

ஜனாதிபதி விஜேதுங்கவின் யூஎன்பி அரசாங்கத்துடன் பிற்போக்கு அரசியல் கொடுக்கல் வாங்கல்களுக்கான முஸ்தீபுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள்ளது. விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள 39 பொலிசாரை விடுதலை செய்யவும், வடக்கே செல்லத் தடைவிதிக்கப்பட்டிருந்த சில பொருட்களை யாழ்ப்பாணம் அனுப்ப விஜேதுங்க அரசாங்கமும் செய்து கொண்டுள்ள முடிபின் பின்னணியில் இந்த அரசியல் உறவுகளுக்கான மேடை தயாராகி வருகின்றது.

இன்று அபிவிருத்தி கண்டு வரும் இந்நிலைமைக்குச் சைகை காட்டும் விதத்தில் அரசாங்கச் செய்தி ஏஜன்சியான 'லங்கா புவத்' வெளியிட்ட அறிக்கையை அரசாங்க ஊதுகுழலான லேக் ஹவுஸ் பத்திரிகைகள் ஜூன் 24ம் திகதி வெளியிட்டனர். ''புலிகள் சமாதானத்துக்கு நிஜ விருப்பம் காட்டுவதாக பிரிகேடியர் கூறுகிறார்''.

புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிசார் தம்மை விடுதலை செய்யக்கோரி 'உண்ணாவிரதம்' ஆரம்பித்ததில் இருந்து விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் ஆளுக்காள் சமிக்கை விடத் தொடங்கினர், பொலிசாரை விடுதலை செய்வதாயின் கொழும்பு அரசாங்கம் கைது செய்துள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களை விடுதலை செய்ய வேண்டுமென விடுதலைப் புலிகள் கோரிய போதிலும் அரசாங்கம் தாம் விடுதலை செய்யத் தயாராகவுள்ள 90 பேரின் பெயர்களை மட்டுமே சமர்ப்பித்தது.

இதற்கிடையே கொடுக்கல் வாங்கல்களுக்கு வெறிபிடித்து அலையும் விஜேதுங்க அரசாங்கம் வாய்ப்பைப் பயன்படுத்த எண்ணியது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் சென்ற பொலிசாரின் பெற்றோருடன் அரசாங்கம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவை தனது பிரதிநிதியாக அனுப்பியது. ஐந்து பொலிசாரை விடுதலை செய்ததன் மூலம் இந்தக் காதல் களியாட்டங்களில் இறங்கிய விடுதலைப் புலிகள் தலைமை, எஞ்சிய 34 பொலிசாரையும் விடுதலை செய்ய வடக்கே செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ள பண்டங்களில் சிலவற்றை அனுப்புமாறு அரசாங்கப் பிரதிநிதியை வேண்டிக் கொண்டுள்ளது. இப்போது விஜேதுங்க அரசாங்கம் சில பொருட்களை வடக்கே அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய ''...அரசாங்கப் பிரதிநிதி இம்முறை விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு நிஜ விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.' 'எவருக்கும் யுத்தம் அவசியம் இல்லை' என பாலசிங்கம் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு பெரும் அக்கறை காட்டுவதாக தெரிகிறது. என பிரிகேடியர் குறிப்பிட்டார். அவர் விடுதலைப்புலிகளின் செய்தியை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்.'' அரசாங்கத்தின் ஊதுகுழல்கள் நிலைமையை இந்தஇலட்சணத்தில் வருணித்திருந்தன.

(9ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கான 'உடன்பாட்டுக்கு' தயாரிப்பு

சமீபகால இலங்கைச் சம்பவங்கள் அமெரிக்கப் பெரும் வர்த்தக வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள். ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கான ஒரு 'உடன்பாட்டை'ப் புனைவதில் அமெரிக்க வெளிநாட்டு கொள்கையின் உத்தியோகப் பற்றற்ற ஆயுதமாக எங்ஙனம் செயற்படுகின்றன என்பதற்கு நல்ல ஒரு உதாரணமாக விளங்குகின்றன.

மே 1ம் திகதிய பயங்கரவாதக் குண்டுவீச்சும், ஜனாதிபதி பிரேமதாசாவும் மற்றும் டசின் கணக்கானோர் தூள் தூளாக்கப்பட்ட காட்சியின் பயங்கரமும் முன் பக்கச் செய்திகளாக வெளி வந்ததோடு சகல தொலைக் காட்சிச் சேவைகளிலும் 30 வினாடிகாட்சிகளாகவும் காட்டப்பட்டன.

இதைத் தொடர்ந்து இடம் பெற்றவை செய்திகளை அறிக்கை செய்வதாக அல்லாமல் ஒரு முதலாளித்துவ பொதுஜன அபிப்பராயத்தினை உற்பத்தி செய்வதாக விளங்கியது. வழக்கம் போலவே 'நியூயோக் டைம்ஸ்' பத்திரிகை முன்னணிப் பாத்திரம் வகித்தது.

படுகொலையின் இரண்டு நாட்களின் பின்னர் டைம்ஸ் பத்திரிகை அதன் கொழும்புச் செய்தியாளர் எட்வேட் ஏ. கார்கனின் ஒரு 'செய்தி ஆய்வினைத்' தாங்கி வந்தது. 'இலங்கை மீண்டும் அதன் அரசியல் ஸ்திரப்பாட்டுக்கும் இனச் சமாதானத்துக்குமான தேடலில் கால் தடக்கி விழுந்துள்ளது. இலங்கையர்கள் பலர் இந்த இலக்குகளை அடைய முடியுமா என இன்று கேள்வி எழுப்பி வருகின்றார்கள்'' என அக்கட்டுரை குறிப்பிட்டது.

இந்தக் கட்டுரையின் இரண்டு நாட்களின் பின்னர் வெளிவந்த டைம்ஸ் பத்திரிகை 'இலங்கையின் சோக நாடகம்' என்ற ஆசிரியத் தலையங்கத்தைத் தீட்டியிருந்தது. இலங்கை 'சண்டை சோக நாடகத்துடன் இனங் காணப்படுவதோடு' 'பழிக்குப் பழி வாங்கும் கலாச்சாரம் தொடர்வதும் உறுதியாகி உள்ளது' எனக் குறிப்பிட்டிருந்தது.

மே 17ம் திகதி இப்பத்திரிகை அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்கள் எழுதியதாகக் கூறி மூன்று கடிதங்களைப் பிரசுரித்தது இக்கடிதங்களில் இரண்டு தமிழ் சிறுபான்மையினரால் எழுதப்பட்டவை. இவர்கள் கலவரங்களுக்கு சிங்கள மேலாதிக்கம் கொண்ட அரசாங்கத்தைக் குறை கூறியிருந்தனர். மூன்றாவது கடிதம் சிங்களப் பெரும்பான்மையினரைப் பேணியதோடு இலங்கைப் பிரச்சினைகளுக்கு இந்தியாவைச் சாடியிருந்தது. அது இந்தியாவை 'சிறிய அயலவரின் உள்ளார்ந்த விவகாரங்களில் தலையிடும் பிராந்திய எருதாக' வருணித்திருந்தது.

இதில் விநோதம் என்னவென்றால் இம் மூன்று கடிதங்களுமே ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கான அழைப்புக்களுடன் முற்றுப் பெற்றது தான். 'பிரச்சினை தலையீடு இல்லாமல் தீர்க்கப்படாது' என முதலாவது எழுத்தாளர் குறிப்பிட்டார். இரண்டாவது கடிதம், 'சர்வதேச உறவுகளில் சில நெறிமுறைகளைக் கொணரவும் பிளிறுகள் கொலைகளுடன் தப்பித்துச் செல்ல இடமளிக்காதிருக்கவும் அனைத்துலகச் சமூகத் (குறிப்பாக மேற்கு) துக்கு' அழைப்பு விடுத்தது. மூன்றாவது, 'யூகோசலாவியாவில் இத்தகையதொரு நிலைமையில் தலையிடுவதைப் பொருத்தமானதெனக் கண்ட அனைத்துலகச் சமூகம் மரணத்தையும் அழிவையும் தடுக்க இலங்கையில் தலையிட்டாக வேண்டும்' எனப்பிரகடனம் செய்தது.

டைம்ஸ் எந்தவிதத்திலும் 'பிரசுரிக்கப் பொருத்தமான' சகல கடிதங்களையும் பிரசுரிப்பதில்லை. மாறாக அதன் ஆசிரியத் தலையங்கப் பகுதியில் பிரசுரிக்கவென மிகவும் கவனமாகப் பொறுக்கி எடுத்தும், தெளிவான ஒரு அரசியல் நோக்கத்துடனுமே பிரசுரிக்கின்றது. இலங்கையில் தலையீட்டுக்கு அழைப்பு விடுக்கும் இம்மூன்று கடிதங்களையும் பிரசுரித்தமையானது தென் ஆசியாவில் ஒரு அமெரிக்க இராணுவச் சாகஜத்துக்கு வழிதிறக்கும் பிரச்சார இயக்கச் சங்கீதத்தின் ஒரு பாகமாகும்.

# சோசலிச அனைத்துலகவாதத்தை பிரகாச...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணிய கிளை செயலாளர் டேவ் ஹைலன்ட், அரசியல் வேட்டையினால் இடம்பெயர்ந்துள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர் கிளையின் சார்பில் கே.ஆர். நேசன் ஆகியோர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் போராட்டத்தை நினைவு கூரும் விதத்தில் விழாவுக்கு நல்வாழ்த்து செய்திகளை அனுப்பியிருந்தனர். அந்த வாழ்த்துச் செய்திகளை பு.க.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ் கூட்டத்தில் வாசித்தார்.

விழாக் கூட்டத்தில் நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் வந்திருந்த முன்னேறிய தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்டோரும், இளைஞர்களும் சுமார் 300 பேர் கலந்து கொண்டனர் பு க.க.வின் 25வது ஆண்டு நிறைவு வரலாற்றைச் சித்தரிக்கும் கண்காட்சியைக் காண 500க்கு மேற்பட்டோர் வருகை தந்திருந்தனர். யாழ்குடா நாட்டில் இருந்து தொழிலாள, இளைஞர் பேராளர் குழு இக் கூட்டத்தில் கலந்து கொண்டது சிறப்பம்சமாக விழங்கியது. விடுதலைப் புலிகளதும் இலங்கைப் படைகளதும் அடக்கு முறைகளுக்கு மத்தியில் ஆறு நாள் பயணம் செய்து, பெரும் சிரமத்துக்கு மத்தியில் இவர்கள் விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தனர். சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிலாளர், யுவதிகள், இளைஞர் குழுவினரும் இவ்விழாக் கூட்டத்தில் பங்கு கொண்டனர். தோட்டத் தொழிலாளர், ஆசிரியர், தொழில் நுட்பவியலாளர். பல்கலைக் கழக, பாடசாலை மாணவர், வேலையற்ற இளைஞர்கள் என்ற பல்வேறு சமூகத் தட்டினரும் இக்கூட்டத்தில் கலந்து சிறப்பித்தனர்.

நான்காம் அகிலத்தை கட்டியெழுப்பிய லியொன் ட்ரொட்ஸ்கி, அவருடன் இணைந்து போராடிய தோழர்கள். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக ஸ்தாபகரும் முன்னாள் பொதுச் செயலாளருமான காலஞ்சென்ற தோழர் கீர்த்தி பாலசூரிய, கழகத்தை ஸ்தாபிக்க உழைத்த ஏனைய தோழர்களான வில்பிரட் பெரேரா. (ஸ்பைக்). கூட்டரசாங்க, யூஎன்பி அரசாங்க, ஜேவீபி பாசிஸ்டுகளால் கொலையுண்ட பு க.க. உறுப்பினர்களான லக்ஷ்மன் வீரக்கோன், எல். ஜி குணதாச, ஆர். பி. பியதாச, ஆர்.ஏ. பிட்டவெல, பீ. டபிள்யூ. குணபால, கிறேசன் கீகியனகே, போன்ற தோழர்களை நினைவு கூர்வதோடு கூட்டம் ஆரம்பமாகியது. சகல பேச்சாளர்களும் இரு தசாப்தங்களுக்கு மேல் பு க.க. பொதுச் செயலாளராக விளங்கி மறைந்த தோழர் கீர்த்தி பாலசூரிய அனைத்துலக ட்ரொட்ஸ்கிஸ்ட்டாக ஆற்றிய போராட்டத்தை நினைவு கூர்ந்தனர்.

## கண்காட்சி

பு. க. க. வின் 5 இலட்சம் சிறப்பு நிதியின் அன்றைய மிகுதியை (ரூபா. 50.000/-) திரட்ட விடுக்கப்பட்ட அழைப்புக்கு ரூபா. 68,000/- திரட்டித்தர கூட்டத்தினர் வாக்குறுதி அளித்தனர். இரண்டு கிழமைகளில் இந்த இலக்கினை எட்ட வாக்குறுதி தந்த கூட்டத்தினர் உடனடியாக ரூபா. 1780/- திரட்டித் தந்தனர். இதுவோர் மறக்க முடியாத வரலாற்று நிகழ்ச்சி. கால் நூற்றாண்டு நிறைவையொட்டி பு.க.க. தமிழ், சிங்கள மொழிகளில் அன்றைய தினம் நான்கு புதிய மார்க்சிச நூல்களை வெளியிட்டிருந்தது.

அன்றைய கண்காட்சி பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் உலக சோசலிசப் புரட்சியின் செயற்பாட்டிற்காக பு.க.க. நடாத்திய போராட்டத்தைச் சுட்டிக் காட்டியது. ட்ரொட்ஸ்கிசத்தின் தொடர்ச்சியைப் பேண பப்லோவாத சந்தர்ப்பவாதத்தில் இருந்து விலகி, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஸ்தாபிதம், 1964ல் ல.ச.ச. கட்சியின் பெரும் காட்டிக் கொடுப்பினால் உச்சக் கட்டம் அடைந்த பப்லோவாதத்துக்கு எதிராக அனைத்துலக குழு நடாத்திய போராட்டம், அதிலிருந்து பு.க.க உதயம், பு.க.க. அனைத்துலக ரீதியிலும் இலங்கையின் உள்ளும் நடத்திய போராட்டத்தின் சகல முக்கிய நிகழ்வுகளும் கட்டங்களும் பழம் பிரசுரங்கள், தினத்தாள்கள், கட்டுரைகள், புகைப்பட உருவில் கண்காட்சியில் இடம் பிடித்தன. பு.க.க. முக்கிய உறுப்பினர்கள் இவ்வரலாற்றை பார்வையாளர்களுக்கு விளக்கினர்.

அனைத்துலகக் குழுவினதும் பீ. எஸ், ஏ. சார்பிலும் வாழ்த்துச் செய்தி வழங்கிய உல்ரிச் ரிபர்ட் பின்வருமாறு குறிப்பிட்டார்; ''கடந்த கால் நூற்றாண்டில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெற்ற முக்கிய வரலாற்று வெற்றி, இலங்கைக்குள் மட்டுமல்ல முழு இந்திய துணைக்கண்டத்திலும் வெடித்தெழும் பாரிய முக்கிய வர்க்க போராட்டங்களை வெற்றிக்கு இட்டுச் செல்லக் கூடிய உறுதியான அரசியல் அடிப்படையைக் கட்டியெழுப்பியதே. வேறு வார்த்தையில் சொன்னால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தின் [illegible] அரசியல் [illegible] படிப்பினையூட்டும் அடிப்படையை ஸ்தாபித்துள்ளது. (உல்ரிச் ரிபட்டின் முழு உரையும் இவ்விதழின் நடுப்பகுதியில் பிரசுரமாகியுள்ளது.)

''1985 – 86ல் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளுக்கு எதிராக, அனைத்துலகக் குழுவின் ஏனைய பகுதியினருடன் இணைந்து நின்று பு. க. க. தொடுத்த போராட்டம் இன்றேல் நாம் இவ்விடத்துக்கு வந்திருப்போமா என்பதற்கு எதுவிதமான உத்தரவாதமும் இல்லை''. என இந்திய சோசலிசத்தொழிலாளர்கழக பொதுச் செயலாளர் தோழர், அருண்குமார் குறிப்பிட்டார். இலங்கை, இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர் மட்டுமன்றி, குட்டி முதலாளித்துவ தலைமைகள் தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்களை இனவாத சேற்றுக்குள் இழுத்துச் செல்லும் நிலையில் அதற்கு எதிரான தலைமையை வழங்குவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவேயாகும்' எனவும அருண் மேலும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பேசிய பு.க.க பொதுச் செயலாளர் விஜே டயஸ் பின்வருமாறு குறிப்பிட்டார். ''எமது வேலைத் திட்டம் உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டமே. எமது இலக்கு உலக சோசலிச ஐக்கிய குடியரசே, இந்நிலையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், நாம் கட்டியெழுப்பும் அனைத்தும் இலங்கைக்கு மட்டுமன்றி உலகப் புரட்சியின் பொருட்டேயாகும் என்பதை வலியுறுத்துகின்றது.

''உலகம் பூராவும் உள்ள எமது சக சிந்தனையாளர்களுடன் 25 ஆண்டு கால எமது படிப்பினைகளை கூட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்டத்திலும் ஆசியாவிலும் சோசலிசப் புரட்சிக்கு அவசியமான புரட்சிகரத் தலைமைக்கு கல்வியூட்டிப் பயிற்சியளிப்பதில் ஈடுபட வேண்டும்' என்றார்.

(12 பக்கம் பார்க்கவும்)

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்**

பெயர் .......................................................

முகவரி: .......................................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற இந்தப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல: 90, 1வது மாளிகாசந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே. வீ. பி. பாசிஸ்டுகளால் கொலையுண்ட தோழர். கிரேசன் நினைவு தினக் கூட்டம்

1989 ஜூலை 23ம் திகதி (சிலாபம்) தொடுவாவையில் கொலை செய்யப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர் தோழர், கிரேசன் கீகியனகேயின் நான்காவது ஆண்டு நினைவு தினக் கூட்டம் தொடுவாவையில் உள்ள அவரது இல்லத்தின் முன்றிலில் நடைபெற்றது.

கொலையுண்ட தோழரின் சகோதரரும் பு.க.க. அங்கத்தவருமான தோழர். நிஹால் கீகியனகேயின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசிய பு.க.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ், பு.க.க. வின் அரசியல் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருவதற்காக கிரேசனின் தாயார், மனைவி, நிஹால் அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

மறைந்த தோழரின் இளம் பராய நினைவுகளை நினைவு கூர்கையில் தோழர். விஜே கூறியதாவது: ''தோழர். கிரேசனுடன் நீண்ட காலம் பழகும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. வாழ்க்கையைப் பெரிதும் நேசித்த ஒருவராக நான் அவரை இனம் கண்டேன். இளவயதில் விளையாட்டு உடற் பயிற்சியில் ஊக்கமுடன் ஈடுபட்டார். இளம் வயதில் தமது காதலியைத் திருமணம் செய்து கொண்டார். அதுமட்டுமன்றி எதிர்கால மனித இனத்தின் எதிர்பார்ப்புக்களால் உந்தப்பட்டு தமது அன்பு நிறைந்த குழந்தை ஒன்றையும் உலகுக்குஈன்று கொடுத்தார். இந்த மனித இன வாழ்க்கையை நேசித்து, எதிர்கால மனித இனத்தின் தலைவிதியையிட்டு எதிர்பார்ப்புக்கள் கொண்டிருந்த ஒருவர் முதலாளித்துவ அமைப்புக்கு குறையிரங்கிய ஜேவீபியின் பாசிச அலுகோசுகளால் கொலை செய்யப்பட்டார். இதன் மூலம் எம் அனைவருக்கும் இத்தகைய ஒரு மனோரம்மியமான வாழ்க்கை இல்லாமல் செய்யப்பட்டது.

கிரேசனின் நான்காவது ஆண்டுநினைவுக்கூட்டத்தில் பு.க.க. செயலாளர் விஜே டயஸ்



''தோழர். கிரேசன் இந்த எதிர்கால அபிலாசைகளைத் தமது தனிப்பட்ட கனவாகக் கொண்டிருக்கவில்லை. மனித இனத்தின் விடுதலையை இன்றைய ஏகாதிபத்திய உலகினுள் முதலாளித்துவ அமைப்பைத் துடைத்துக் கட்டும் உலக சோசலிசப் புரட்சி மூலமே சாதிக்க முடியும் என்பதை அவர் புரிந்து கொண்டிருந்தார். எனவே தான் அவர் தொழிலாள வர்க்கத்தின் உலகப் புரட்சிக் கட்சியின் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர முடிபு செய்தார். 27 வயதில் எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட தோழர்' கிரேசன். சகல இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வழங்கிய முன்நோக்கு இதுவே. நாம் கிரேசனுக்குச் செய்யக் கூடிய அதி உயர்ந்த கௌரவம், அம்முன்நோக்கில் காலூன்றவும் அதை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களிடையே உறுதி செய்யவும் ஈவிரக்கமின்றிப் போராடுவதே.

''ஜேவீபி பாசிஸ்டுகள் தோழர். கிரேசனுக்கு துப்பாக்கி நீட்டிய 1989 பதுகளைக் காட்டிலும் இன்று இந்த அனைத்துலகப் புரட்சிகர முன்னோக்கின் அவசியம் வரலாற்று ரீதியில் தலை நீட்டியுள்ளது.

''இன்று முதலீடுகளும், உற்பத்திகளும், வர்த்தகமும் உலகளாவிய ரீதியிலேயே இடம் பெறுகின்றன. பல்வேறு பன்னாட்டு ஏகபோகங்கள் உலகச் சந்தையின் உள்ளே தமது ஆளுமையை நிலைநாட்டும் ஏகாதிபத்திய அரசியல் அமைப்பினைக் கொண்டுள்ளன. இவை உலக ரீதியில் நிதி மூலதனத்தின் பக்கபலத்துடன் இராணுவத் தலையீட்டுடன் கூடிய ஆக்கிரமிப்புத் திட்டங்களை தயாரித்து வருகின்றார்கள்.

''தேசிய சிறப்புரிமைவாதம் தேசிய வேலைத்திட்டங்களைத் தாண்டி அனைத்து நாடுகளிலும் உலகஏகாதிபத்தியத்தின் யுத்த வெறியும் காலனித்துவ வேலைத்திட்டங்களும் ஆதிபத்தியம் செலுத்துகின்றன. ஜனாதிபதி பிரேமதாச கொலை செய்யப்பட்டதன் பின்னர் விஜேதுங்க ஆட்சியை இந்த உலக சக்திகள் தம் பிடிக்குள் போட்டுக் கொண்டுள்ளன. பொருளாதார வேலைத்திட்டத்தில் செய்யும் மிலேச்ச மாற்றங்கள் மூலமும், நிர்வாக முறையிலும் உள்நாட்டு யுத்த திட்டங்களிலும் செய்யும் அப்பட்டமான ஒடுக்குமுறை இலட்சணங்கள் மூலமும் இது தெளிவாகின்றது. 'கறுப்பு பூனை' கொலைக் கும்பலின் நெறியாளன் உடுகம்பொல ஜனாதிபதியின் விசேட சிபார்சின் பேரில் வரவழைக்கப்பட்டுள்ளவை இத்திட்டங்களுடன் தொடர்பற்ற ஒரு 'தற்செயலான நிகழ்வு ஆக முடியுமா?' என விஜே டயஸ் கேட்டார்.

''இந்நிலையில் முதலாளித்துவ, முதலாளித்துவச் சார்பு அமைப்புக்களின் சகல சந்தர்ப்பவாதத் தலைவர்களும் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களின் எடுபிடிகள் ஆகியுள்ளனர். சமசமாஜ, ஸ்டாலினிசத் தலைவர்கள் ஏகாதிபத்தியச் சார்பு சி.ல,சு.க.வுடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்துக்கு தோள் கொடுத்துள்ள அதே வேளையில் நவசமசமாஜ துரோகிகள் ஜேவீபி பாசிச கொலைகாரர்களின் பணியினை அரங்கேற்ற இணைந்து செயற்படுகின்றார்கள். விடுதலைப் புலிகள் இயக்கமும் இத்தலைவர்களும் இந்நாட்டில் ஜனநாயகத்தை காக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும்ஏகாதிபத்திய கள்வர் குகையான ஐக்கிய நாடுகள் சபைக்கும் அழைப்பு விடுக்கின்றனர். இது உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒன்றிணைந்து கிளர்ந்து எழக் கூடிய உலகத் தொழிலாள வர்க்கத்துக்கும் அதன் சுயாதீனமான வேலைத்திட்டத்துக்கும் எதிராக சொலைகாரர்களுக்கும், ஆக்கிரமிப்பாளர்கட்கும் விடுக்கப்படும் அழைப்பாகும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் சுழகம் இத்துரோகத்தை எதிர்த்து, உலக தொழிலாளி வர்க்கத்தை அனைத்துலக புரட்சிகர அடிப்படையில் ஐக்கியப் படுத்தவும் அணிதிரட்டவும் போராடுவதாக விஜே டயஸ் மேலும் குறிப்பிட்டார். அந்த அடிப்படையில் போராடுவதன் மூலமே தோழர் கிரேசனின் உயிர்த் தியாகத்தினை கௌரவிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

## உதவி வழங்கும் குழு இலங்கைக்கு 84கோடி டாலர் வழங்க வாக்குறுதி அளித்தது ஏன்?

இலங்கைக்கு உதவி வழங்கும் குழு என்ற பேரில் தோன்றி வரும் ஏகாதிபத்திய கொலையாளிகள் ஜூன் 18ம் திகதிய பாரிஸ் கூட்டத்தில் 4000 கோடி ரூபாய் (84 கோடி டாலர்) கடனுதவி வழங்க வாக்குறுதி அளித்துள்ளது. இதனை யூஎன்பி அரசாங்கம் பெருமகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் இந்த 'வாக்குறுதி'களின் பின்னால் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் மேல் சகிக்க முடியாத தாக்குதல் தொடுக்கும் சதி பதுங்கிக் கொண்டுள்ளது.

இந்த பாரிஸ் கூட்டத்துக்கு ஒரு சில தினங்கள் முன்னதாக விஜேதுங்க அரசாங்கம், ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைகளை அமுல் செய்வதில் தாம் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல என்பதைக் காட்டிக் கொண்டது.

புகையிரத சேவையை அதிகார சபையாக்குவதாக அறிவித்த விஜேதுங்க, தொலைத் தொடர்பு சேவையை கூட்டுத்தாபனமாக்கி நிறுவப்பட்ட 'டெலிக்கொம்' நிறுவனத்தை வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்றுத் தள்ளும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார். 1 லிட்டர் மண்ணெண்ணெய் விலையை 3 ரூபாய் கூட்டிய அரசாங்கம், ஜூலை 1ம் திகதி தொடக்கம் மின்சாரக் கட்டணத்தை நூற்றுக்கு 17 வீதத்தினால் அதிகரிப்பதாகவும் அறிவித்தது. பாணின் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மாவின் விலையை மனம்போன போக்கில் அதிகரிக்கும் பொருட்டு மாவை இறக்குமதி செய்ய இதுவரை காலமும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கு (C.W.E.) இருந்து வந்த ஏகபோகம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக இந்த உலக வங்கி, சர்வதேச நாணய சபையின் கட்டளைகளை அமுல்படுத்தி வந்த அதே வேளையில், பொதுமக்களின் சண்களில் மண்தூவும் பொருட்டு பிரேமதாச கடைப்பிடித்து வந்த சமூக வேலைத் திட்டத்தினை துடைத்துக் கட்ட விஜேதுங்க அரசாங்கம் 'விருப்பம்' தெரிவித்துள்ளதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் அறிவித்துள்ளன.

1992 பெப்ரவரியில் இருந்து ''இலங்கை கண்டுள்ள பொருளாதார முன்னேற்றத்தினை பாராட்டிய' உலக வங்கியின் தென் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் போல் இசென்மான் 'இன்னும் நன்றாக செய்யுங்கள். செய்ய முடியாது எனத் தோன்றுவதைச் செய்யுங்கள்' என விஜேதுங்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையின் பழைய பொருளாதார அமைப்பில் எஞ்சியுள்ள மிச்ச சொச்சங்களை அகற்றும் படியும், பன்னாட்டுக் கம்பனிகளின் சுரண்டலுக்கு முன்னொரு போதும் இல்லாத வாய்ப்பினை சிருஷ்டித்துத் தரும்படியும் ஏகாதிபத்தியவாதிகள் வேண்டியுள்ளனர். இதன் மூலம் ஏகாதிபத்திய முதலீட்டாளர்களுக்கு பகற்கொள்ளைக்கான சுதந்திரம் கிட்டுகின்றது. தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு தொழில், உதவி மானியங்கள், வாழ்க்கைத் தரம் நாசமாகின்றது.

இந்த விதத்தில் பார்ப்பின் உதவி வழங்கும் குழுவின் 4000 கோடி ரூபாக்கள் இலங்கையின் 'பொருளாதார அபிவிருத்திக்கு' பீட்சா பாத்திரத்தில் இருந்து கிடைத்த தானம் அல்ல. இந்த 'உதவி நிதி'யில் நூற்றுக்கு 60 – 70 வீதம் முன்னர் வழங்கிய கடன்களையும் அவற்றுக்கான வட்டிகளையும் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாரிஸ் பேச்சுவார்த்தைகளில் இருந்து இலங்கை திரும்பியதுதான் தாமதம் தோட்டங்களை பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தனியார்கம்பனிக்குஅவற்றை 99 ஆண்டுக் குத்தகைக்குவழங்குவதாக அறிவித்தார், இலட்சோப லட்சம் தோட்டத் தொழிலாளர்களதும் அவர்களின் குடும்பங்களதும் தலைவிதி இந்த தனியார் கம்பனி முதலாளிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்தக் கம்பனிகள் தோட்டங்களில் இருந்து தொழிலாளர்களை இலட்சக் கணக்கில் வேலை நீக்கம் செய்யும் திட்டங்களைத் தயார் செய்து கொண்டுள்ளன.

உலக வங்கியையும், சர்வதேச நாணய நிதியத்தினையும் தமது கைத்தேங்காயாக. பயன்படுத்திக் கொண்டுள்ள ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் தொழில், வாழ்க்கைத் தரத்தினை நாசமாக்க இந்த விதத்திலேயே களத்தில் இறங்கி உள்ளன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொண்டமான் ஏகாதிபத்தியத்தின் வக்கிலாக நின்று வருகிறார்

கடந்த மாகாண சபைத் தேர்தலில் தோட்டத் தொழிலாளர்களின் பெருவாரியான வாக்குக்களைத் திரட்டியதன் மூலம் யூஎன்பியைப் பலப்படுத்தச் செயற்பட்டதால் முதலாளித்துவக் கட்சிகளாலும், பத்திரிகைகளாலும் வீரபுருஷராக தூக்கிப் பிடிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான், தமது அடுத்த துரோக நிகழ்ச்சி நிரலைப்பற்றி வாயடிக்கத் தொடங்கியுள்ளார்.



தொண்டமான்

தொண்டமான் கூறுவது என்ன? தோட்டத் தொழிலாளர்கள் தமது ‘தலைமையை’ அங்கீகரிப்பதன் ஒரு அடையாளமாகவே இவ்வளவு பெருவாரியாக வாக்களித்துள்ளனர். இது அர்த்தமற்ற வெறும் தர்க்கமாகும். யூஎன்பி—இதொகா கூட்டுக்கு வாக்களிப்பதன் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் தமது பெரும் குழப்ப நிலைமையைக் காட்டிக் கொண்டுள்ளனர். இந்தக் குழப்ப நிலைமையைச் சூறையாடிக் கொள்ளத் தொண்டமானும், முதலாளித்துவக் கட்சிகளும், பத்திரிகைக்காரர்களும் முழு முயற்சி எடுத்து வருகின்றன. இவை அனைத்தும் தோட்டத் தொழிலாளர்களை நசுக்கவும், கொடும் அழிவுக்குள் தள்ளவுமே.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் பொருட்டு இந்திய இராணுவ ஆக்கிரமிப்பினைத் தொடுப்பதற்காகக் கொணரப்பட்ட இந்திய—இலங்கை உடன்படிக்கையின் கீழேயே மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. உண்மையில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் எடுத்திருக்க வேண்டிய சரியான நிலைப்பாடு என்ன? இப்பிற்போக்கு அமைப்புக்களுக்காக நடாத்தப்பட்ட தேர்தலைப் பகிஷ்கரிப்பதே. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே இக்கோரிக்கையை முன்வைத்தது. யூஎன்பி, சி.ல.சு.க முதலான முதலாளித்துவக் கட்சிகள் மட்டுமன்றி சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா. அமைப்புக்களதும், தொழிற் சங்கங்களதும் தலைவர்களும் மாகாண சபைகள் மூலம் ஜனநாயகம் கை கூடுவதாக ஒன்று கூடி கூச்சல் போட்டனர். இதன் மூலம் பொது ஜனங்களை இப்பிற்போக்கு அமைப்புக்களுடன் பிணைத்துப் போடச் செயற்பட்டனர். தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமன்றி ஏனைய தொழிலாளர்களும் அடைந்துள்ள குழப்ப நிலைக்கான முதலாம் நம்பர் வெளிப்பாடாக இந்த மாகாண சபைத் தேர்தல்களில் கலந்து கொண்டமை விளங்கிற்று.

மறுபுறத்தில் இ.தொ.கா. தலைவர்கள், ஏனைய தலைமைகள் தோட்டத் துறையினுள் இழைத்துள்ள கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்களை தமக்குச் சாதகமாகச் சுரண்டிக் கொண்டனர். கடந்த ஆண்டின் கடைப்பகுதியில் இருந்து தோட்டத் தொழிலாளர்கள் இதொகா தலைவர்களை சவால் செய்யும் விதத்தில் வர்க்கப் போராட்டத்தில் குதித்தமையைக் காண முடிந்தது. தொண்டமான் தோட்ட தனியார் மயமாக்கத்தின் ஆதரவாளர் மட்டுமல்ல; தனியார் மயமாக்கத்தின் பேரில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட ஏகாதிபத்திய ஏஜண்டு. தோட்ட முகாமையின் கொடிய தாக்குதல்களை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்த போதெல்லாம் அவர்கள் தொண்டமானின் நாசகார வேலைகளைத் தாண்டியே குதித்தனர்.

சமசமாஜ, நவசமசமாஜ, ஸ்டாலினிச, கம்யூனிச கட்சிகளின் தொழிற் சங்கங்களும் என் யூ.டபிள்யூ, மலையக மக்கள் முன்னணி போன்றவற்றின் தலைமைகளும் தோட்டத் தொழிற்சங்க கூட்டு முன்னணி அமைத்துக் கொண்டு செய்தது என்ன? தோட்டத்துக்குத் தோட்டம் இத்தொழிலாளர்களை உற்சாகம் இழக்கச் செய்ததும், தனிமைப்படுத்தியதும் போராட்டத்தில் இருந்து திருப்பி அனுப்பியதுமே. மாகாண சபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் கோருவதற்கு முன்னர் தோட்டத் துறையில் ஒரு நாள் ‘பொது வேலை நிறுத்தம்’ செய்வதாக இம் முன்னணி அறிவித்தது. நியமனப் பத்திரங்கள் கையளித்தவுடன் அவர் கூறியது என்ன தெரியுமா? தேர்தல் முடியும் வரை வேலை நிறுத்தத்தை ஒத்தி வைப்போம்!

தொண்டமானுக்கும் இத்தலைவர்களுக்கும் இடையே என்ன வித்தியாசம்? பொய் வாய் வீச்சும் வாயடிப்புமேயன்றி வேறொன்றும் இல்லை. 1964ல் சமசமாஜத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பினால் தோட்டத் தொழிலாளர்களிடையே தொண்டமானின் பிடி இறுகிப் பரந்தது, இத்தொழிலாளர்கள் பெருமளவில் குழப்பியடிக்கப்பட்ட நிலையில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் வீழ்ந்த முதலாளித்துவ முன்னணிக்கு வாக்களிக்காமல் தொண்டமான் வீழ்ந்த யூஎன்பி—காங்கிரஸ் முன்னணிக்கு வாக்களிக்கத் தள்ளப்பட்டமை புதுமை அல்ல. ஸ்டாலினிசத் தொழிற்சங்கத் தலைவர்களும் மாஜி மாகாண சபை அங்கத்தினர்களுமான டபிள்யூ. ராமையா, எஸ். நடேசன் போன்றோர் அடியுண்டு போனது இப்பின்னணியிலேயே.

தொண்டமான் [illegible] மூலம் கையைப் பலப்படுத்திக் கொண்டு இன்று முதலாளித்துவ வர்க்கத்துடன் சேர்ந்து தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கும் அரை சர்வாதிகாரத்தினைத் தொடுக்கத் தமது முழு ஆதரவையும் அப்பட்டமாக வழங்க வாக்குறுதி அளித்துள்ளார். ‘ஜனாதிபதி முறையை பேண நான் போராடுவேன்’ என தொண்டமான் ஓயாது கூறிக் கொண்டுள்ளார். அது பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காட்டிலும் சிறந்தது எனவும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் சிறுபான்மை தேசிய இனங்கள் தாக்கப்பட்ட போதிலும் ஜனாதிபதி முறையின் கீழ் அப்படி அல்ல எனவும் அவர் கூறி வருகின்றார்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பாராளுமன்ற ஜனநாயகம் எனப்படுவது பற்றி நம்பிக்கை வைக்கவில்லை. இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகம் ‘ஏபர் சீல்’ ஆக்கப்பட்டு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை கொணரப்பட்டது. காரணம்? ஜனாதிபதியின் கரங்களில் அதிகாரங்களைச் சுருட்டிக் கொண்டு தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை நசுக்குவதற்கான ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டல் நிபந்தனைகளை ஊர்ஜிதம் செய்வதற்கே. நடந்தது அதுதான். தொண்டமான் அதன் பங்காளி. வட—கீழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கும், தோட்டத்துறை தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கும் எதிரான கொடூரமான இந்த முதலாளித்துவக் கோஷ்டிகளுக்கிடையேயான இழுபறிகளாலும் மோதுதல்களாலும் இந்த நிலைமை சிதறுண்டு போகுமோ என் செளமியமூர்த்தி தொண்டமானுக்கு குலைநடுக்கம் பிடித்துள்

(11ம் பக்கம் பார்க்க)

# கந்தளாய் பரமேஷ்வரா அதிபருக்கு எதிரான பொலிஸ் வேட்டையை தோற்கடி!

கந்தளாய் பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் கணேசலிங்கம் ஜூன் 10ம் திகதி கந்தளாய பொலிசாரால் கைது செய்யப்பட்டு அன்றிரவு 10மணி வரை பொலிஸ் றிமான்டில் வைக்கப்பட்டு மறு நாள் நீதி மன்றத்தில் ஆஜார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அதிபர் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டவர் என்ற விநோதமான குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டார். பரமேஸ்வரா வித்தியாலய மின்சார சாதனங்களைப் புதுப்பிப்பதற்கென சர்வோதய இயக்கத்திடம் இருந்து கிடைத்த ஒரு சுற்று வயரும், வித்தியாலய றோனியோ இயந்திரமும் பந்கோபஸ்துக்காக அதிபரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தன. இவை அதிபருக்குக் கிடைத்தது எப்படி என்ற கேள்வியை எழுப்பியுள்ளனர். பொலிசாரின் இக் கேள்விக்கு அதிபரால் சிங்களத்தில் பதில் அளிக்க முடியவில்லை. இதை தொடர்ந்து அதிபர் இச்சாமான்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாயில் 1988 — 1990 காலப்பகுதியில் ஜேவீபியுடன் தொடர்பு எனக்கூறி பெருமளவிலான சிங்கள இளைஞர்களும், யுவதிகளும், கொல்லப்பட்டனர். இன்னும் பலர் சிறைக்குள் தள்ளப்பட்டனர். இந்த விதத்தில் இன்று கந்தளாய் கோவில்கமம், யூனிட் -3, போட்டன் காட்டு போன்ற இடங்களில் பெருமளவிலான தமிழர்கள் விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கூறி ஒன்றில் கொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த விதத்தில் யூனிட் -9. என்ற தமிழ்க் கிராமம் அடியோடு நாசமாக்கப்பட்டுள்ளது. இங்கு வசித்த தமிழ் கிராமத்தவர்கள் கொலை செய்யப்பட்டதோடு வீடுகள், கூட்டுறவுக் கடைகள், நூல் நிலையம், பாடசாலை, பிரஜைகள் மண்டபம் ஆகியன தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன.

இந்த நீண்ட இனவாதப் பயங்கர இயக்கத்தின் ஒரு அங்கமாகவே பரமேஸ்வரா அதிபரின் கைதும் இடம் பெற்றுள்ளது. இந்த இலட்சணத்திலேயே சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்கள் ‘சிவில் நிர்வாகம்’ புனருத்தாரணம் செய்யப்பட்ட இடங்களில் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்த வேண்டும் என்ற பிற்போக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர், புளட், டெலோ, ஈபீஆர்எல்எப் போன்ற கூலிப் படை இயக்கங்கள் கிழக்கு மாகாணத்தினை சிங்கள சோவினிச பிரச்சாரத்துக்கு ஏற்றவிதத்தில் தமிழ், சிங்கள, முஸ்லீம் அலகுகளாகப் பிரித்து, இணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

# இராணுவத் தாக்குதலை எதிர்த்து ஆஸ்பத்திரி ஊழியர் வேலைநிறுத்தம்

ஜூன் 7ம் திகதி இரவு குடிவெறியில் நுழைந்த சுமார் 20 இராணுவத்தினர் கந்தளாய் ஆஸ்பத்திரியில் சேவையில் ஈடுபட்டிருந்த தாதியைத் தாக்கியதைக் கண்டித்து ஆஸ்பத்திரி ஊழியர்கள் ஜூன் 8ம் திகதி வேலை நிறுத்தம் செய்தனர்,

இரவு 9-45 க்கு குடிவெறியில் வந்த இராணுவத்தினர் நோயாளி ஒருவரைப் பார்வையிட அனுமதி கேட்டுள்ளனர். அது நோயாளியைப் பார்வையிடும் நேரம் இல்லாத போதிலும் விரைவில் [illegible] சேவையில் இருந்த தாதி, இராணுவத்தினரை வேண்டினார். ‘நாம் நாட்டைக் காக்க வந்த சிங்கள இளைஞர்கள். நாம் பகலில் இருப்பது காட்டில். நாம் விரும்பிய நேரத்தில் நோயாளரைப் பார்வையிட இடம் இல்லையா?’’ எனக் கூறி அவ்வேளையில் வேலையில் ஈடுபட்டிருந்த தாதிமீதும் மற்றும் ஊழியர்கள் மீதும் பாய்ந்து விழுந்துள்ளனர். நிலைமையை விளக்க முனைந்த ஆஸ்பத்திரி ஊழியரை சேர்ட் கொலரில் பிடித்துக் கொண்டு கால் கையால் தாக்கியுள்ளனர். இச் சமயத்தில் அங்கு வந்த டீ. எம். ஓ. வுடனும் இராணுவத்தினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்த இராணுவத்தினர் அல்லை இராணுவ முகாமில் இருந்து வந்ததோடு, இதற்கு முன்னரும் இத்தகைய ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக ஆஸ்பத்திரி ஊழியர்கள் பொலிசில் முறைப்பாடு செய்ததோடு, இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளவர்களை உடன் கைது செய்யுமாறும், தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ஆஸ்பத்திரி ஊழியர்களிடம் மன்னிப்புக் கோருவதோடு, கொலை மிரட்டல் வாபஸ் பெறப்பட வேண்டும் எனவும் வேண்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பலம், பாட்டாளிவர்க்க அனைத்துலக வாதத்துக்கான போராட்டத்திலேயே தங்கியுள்ளது''

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25 வது ஆண்டு நிறைவு விழா

**நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் ஜேர்மன் ட்ரொட்ஸ்கிச கட்சியான புன்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரினதும் சர்பில் மகாநாட்டில் வாழ்த்துச் செய்திகளை வழங்கி தோழர். உலி றிப்பேர்ட் நிகழ்த்திய உரை.**



உல்ரிச் ரிப்பேர்ட் ஆண்டு விழாக் கூடடத்தில் உரையாற்றுகிறார்

புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகம் ஸ்தாபிக்கப்பட்டதன் 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த வரலாற்று கூட்டத்தில் பங்குபற்றக் கிடைத்ததை நான் மாபெரும் கௌரவமாகவும் பெரும் பாக்கியமாகவும் கருதுகின்றேன். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் அதன் ஜேர்மன் கிளையான புன்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரினதும் புரட்சிகர நல் வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்னதாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிறுவப்பட்டமை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினைக் கட்டியெழுப்புவதில் ஒரு தீர்க்கமான முன்நடவடிக்கையாகும். இரண்டரைத்தசாப்தங்களாகப் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய கொள்கை ரீதியான போராட்டம் உலகம் பூராவும் எமது இயக்கத்தின் தோழர்களுக்கு மன வுறுதியை வழங்கியுள்ளது,

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாக நான் கண்காட்சியை ரசித்தேன். அங்கு புகைப் படங்களும் பத்திரங்களும் எமது கட்சி எவ்வளவு பலம் வாய்ந்த அரசியல் வரலாற்றினைக் கொண்டுள்ளது என்பதற்கு நல்ல சாட்சி பகர்ந்தன. சிறப்பாகக் கட்சி இன்னமும் ஒரு பரந்த கட்சியாகாத நிலைமையிலும், எமது சக்திகள் வரையறுக்கப்பட்டதாக உள்ள நிலையிலும் எமது வரலாற்றுப் பணியினைக் குறைத்து மதிப்பிடுவது என்றும் ஆபத்தானது.

தங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான வெற்றி என்ன என நீங்கள் நினைக்கின்றீர்கள் என ஒருமுறை ட்ரொட்ஸ்கியிடம் கேட்டபோது அவர் 1917 அக்டோபர் புரட்சிகர எழுச்சியில் அமைப்பாளராகவும், மறுசீரமைப்பாளராகவும் தாம் ஆற்றிய பாத்திரத்தினைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அவ்வாறே புரட்சிகர அரசாங்கத்தின் மக்கள் ஆணையாளராக தமது பாத்திரம் பற்றியோ அல்லது செஞ்சேனையின் பிரதம ஆணையிடும் அதிகாரி பாத்திரம் பற்றியோ அவர் பேசவில்லை. தனிமைப் படுத்தப் பட்ட நிலையில் ஸ்டாலினினதும் அவனது கொலைகாரக் கும்பலினதும் நிழலின் கீழ் 1920பதுகளின் கடைப் பகுதியிலும் 1930பதுகளிலும் மார்க்சிசத்தினைக் காக்கும் போராட்டத்தில் நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டுக் காரியாளர்களை அணிதிரட்டத் தாம் நடாத்திய போராட்டத்தினையே தமது முக்கியமான அரசியல் போராட்டம் என ட்ரொட்ஸ்கி கூறினார்.

கடந்த கால் நூற்றாண்டினுள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெற்றுள்ள மாபெரும் வரலாற்று வெற்றி என்னவெனில் இலங்கையினுள் மட்டுமன்றி முழு இந்தியத் துணைக் கண்டம் பூராவும் வெடித்துக் கிளம்பும் பிரமாண்டமான எதிர்கால வர்க்கப் போராட்டங்களை வெற்றிக்கு இட்டுச் செல்வதில் வெற்றி காணத்தக்க உறுதியான அரசியல் அத்திவாரத்தினை இட்டமையேயாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால், தொழிலாளி வர்க்கத்தினை ஆழமான முறையில் அரசியல் ரீதியில் மீண்டும் பயிற்சியளிக்கும் அத்திவாரத்தினைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போட்டுள்ளது.

நீரோட்டத்துக்கு எதிராக நீச்சல் அடிப்பதன் மூலம் மத்தியதர வர்க்கத் தீவிரவாதப் பகுதியினர் மாஓசேதுங், பிடெல் கர்ஸ்ட்ரோ, சேகுவேரா மற்றும் ஸ்டாலினிச, மாஓவாத தலைவர்கள் கூப்பாடு போட்ட நிலைமைகளுக்கு அடிபணிந்து போகாதிருக்கும் வல்லமை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு ஏற்பட்டது எப்படி? புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சக்தியாக விளங்கியதும் விளங்குவதும் அவர்கள் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்துக்கான கொள்கை சார்ந்த போராட்டத்தினை அடிப்படையாகக்கொண்டிருந்தமையே ஆகும். ட்ரொட்ஸ்கி போராடிய முன்நோக்கின் —பின்தங்கிய நாடுகள் முகம்கொடுக்கும் ஜனநாயகப் பணியினை பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அடிப்படையில் மட்டுமே இட்டு நிரப்ப முடியும் என்பதன் விஞ்ஞான பூர்வமான உண்மையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் காரியாளர்கள் ஆரம்ப காலம் தொட்டே ஆழமாகப் புரிந்து கொண்டிருந்தனர்.

தொழிலாளி வர்க்கத் திசையிலான இந்த அணுகுமுறை, ட்ரொட்ஸ்கிசத்தின் மற்றுமோர் மாபெரும் இலட்சணமான புரட்சிகரத் தலைமை நெருக்கடியை வெற்றி கொள்ளும் போராட்டத்துடன் இணைந்து கொண்டது. நிறுவப்பட்ட ஆரம்ப காலத்தில் இருந்து லங்கா சமசமாஜக் கடசிக் காட்டிக் கொடுப்புக்களின் வரலாற்றுத் தாக்கங்களை வெற்றி கொள்ளப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடியது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை நிறுவிய தோழர்கள் லங்கா சமசமாஜக் கட்சியின் வங்குரோத்து, பிற்போக்கு முன்நோக்கினை நிராகரித்தனர்.

## கீர்த்தி பாலசூரிய

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஸ்தாபகத் தோழர்களின் வீரியம் நிறைந்த கொள்கை சார்ந்த போராட்டத்தினைப் பற்றிப் பேசும்போது தோழர். கீர்த்தி பாலசூரிய பற்றிக் குறிப்பிடாமல் அதை செய்ய முடியாது. மார்க்சிசம் தொடர்பாக அவருக்கிருந்த ஆழமான அறிவினாலும் அவரின் புரட்சிகர உத்வேகத்தினாலும் கீர்த்தி எம்மில் பலருக்கு ஊக்கமூட்டினார். இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன்னர் 1972ல் லண்டனில் நடைபெற்ற மகாநாடொன்றில் நான் அவரை முதல் தடவையாக சந்தித்த போது அவர் எனக்கு ட்ரொட்ஸ்கியின் [illegible] கோட்பாட்டினை [illegible] நெறிமுறையாக விளக்கியமை என்றும் என் நினைவை விட்டகலாது. எமது நினைவில், சிந்தனையில் தோழர் கீர்த்தி என்றும் உயிர் வாழ்கின்றார். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சந்தர்ப்பவாத விதிமுறைக்கு எதிரான முதல் விமர்சனத்தினை முன்வைத்தது கீர்த்தியும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக தலைமையுமாய் இருப்பது தற்செயலானதல்ல. கட்சி ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களுள் 1971ல் பங்காளதேசில் இடம்பெற்ற இந்திய இராணுவத் தலையீட்டினை மைக்கல் பண்டா பேணியதனை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சவால் செய்தது. ஹீலி, பண்டா, சுலோற்றர் இந்த விமர்சனங்களைக் கீழ்ப்படுத்தியதோடு, பல ஆண்டுகளுக்கு அனைத்துலகக் குழுவின் தலைவர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை அனைத்துலகக் குழுவினுள் தனிமைப்படுத்தவும் அதை நாசமாக்கவும் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்தனர்.

எனினும் அவர்களின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அனைத்துலகவாத அடிப்படை சந்தர்ப்பவாதிகளின் பிற்போக்குத் தாக்குதல்களைக் காட்டிலும் பலம் மிக்கதாய் விளங்கிற்று. பதினைந்து ஆண்டுகளின் பின்னர் அனைத்துலகக் குழுவின் உள்ளே போராட்டம் வெடித்த போது ஓடுகாலிகளைத் தோற்கடிக்கும் போராட்டத்தினுள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முக்கியமான பல துறைகளில் தீர்க்கமான பாத்திரங்களை இட்டு நிரப்பியது. நான்காம் அகிலத்தினுள் சந்தர்ப்பவாதிகள் தீர்க்கமான தோல்விகளுக்கு ஆட்பட்டுள்ள ஒரு நிலைமையிலேயே இன்று நாம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25து ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்றோம். எம்மை குறுங்குழுவாதிகள் என அவர்கள் இடைவிடாது சேறடித்து வந்தனர். உங்களின் வரலாறு பற்றியும் சந்தர்ப்பவாதத்துக்கும் குட்டி முதலாளித்துவத் தேசியவாதத்துக்கும் எதிரான கொள்கை சார்ந்த போராட்டம் பற்றியும் நீங்கள் கூறுபவை பற்றியும் யாருக்கும் அக்கறை கிடையாது என அவர்கள் கூறினர்.

மொஸ்கோ, கியூ, கார்கோவ், பழைய சோவியத் யூனியனின் ஏனைய நகரங்களில் இருந்து வந்த பலர் கலந்து கொண்டதும், அக்டோபர் புரட்சியினதும் நான்காம் அகிலத்தினதும் வரலாறு பற்றிக் கலந்துரையாடியதுமான வெற்றிகரமான ஒரு கருத்தரங்கினை மூன்று மாதங்களிற்கு முன்னர் கியூ நகரில் நடாத்துவதில் நாம் வெற்றி கண்டோம் என்பதை உங்களில் பலர் அறிவீர்கள். ஒரு தொடர்பு, கருத்தரங்குக்கு யூரல் மலைச் சாரலுக்குப் பின்னால் உள்ள செல்யாபின்ஸ்கில் இருந்து மூன்று நாள் புகையிரதப் பயணத்தின் பின் வந்திருந்தார். அவர் எம்முடன் கலந்துரையாடும் போது தொழிலாளர் புரட்சிக் கட்சியுடனும் கலந்துரையாடலை ஆரம்பித்திருந்தார். கலந்துரையாடலின் பின்னர் புகழ் பெற்ற சைமன் பிரானிக்கு கடிதம் வரைந்த அவர், தொழிலாளர் புரடசிக் கடசி அனைத்துலகக் குழுவில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் கேட்டிருந்தார். இக்கடிதம் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் உள்ளே மீண்டும் ஒருமுறை மிக ஆழமான நெருக்கடியை உண்டு பண்ணியது. என்றோ ஒருநாள் எவரேனும் தம்மிடம் இந்தக் கேள்வியை எழுப்புவர் என அவர்கள் கெட்ட கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். விரைவில் ஓடுகாலிகள் இடையே அடுத்த பிளவு ஏற்படுவதும் இம்முறை அது சுலோற்றர், பிரானி இடையேயான பிளவாக விளங்கும் என்பதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுகின்றன.

மறுபுறத்தில்நாம் சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான எமது போராட்டத்தினுள் பலமடைந்து, உலகம் பூராவும் சகல நாட்டின் உள்ளும் எமது நடவடிக்கைகளுக்கான முன் நடவடிக்கையை எடுத்துள்ளோம். பழைய சோவியத் யூனியனில் இருந்து வருகின்ற தொழிலாளர்கள், இளைஞர்கள், புத்திஜீவிகளைக்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ட்ரொட்ஸ்கிச வேர்க்கஸ் லீக்கின்
# வாழ்த்துச் செய்தி

அன்பின் தோழர் விஜே,

இந்த வரலாற்றுப் பெருமை நிறைந்த கொண்டாட்டத்தில் 'வேர்க்கஸ் லீக்' புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமைக்கும் அங்கத்தவர்களுக்கும் மாபெரும் பெருமிதத்துடனும் அரசியல் திருப்தியுடனும் அதன் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. ஒரு கால் நூற்றாண்டு காலத்துக்குப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் உலகம் பூராவும் உள்ள ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு ஒரு அரசியல் ஊக்கத்தின் மூலமாக இருந்து வந்துள்ளது. மிகவும் கஷ்டமான நிலைமைகளின் கீழும் கூட மார்ச்சிசத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சளைக்காது காக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் செயற்பாட்டினால் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அளப்பரிய விதத்தில் பலமூட்டப்பட்டது. உண்மையில் அனைத்துலகக் குழுவின் உயிர் நீடிப்பும் ட்ரொட்ஸ்கிசத்தின் சந்தர்ப்பவாத எதிரிகளுக்கு எதிரான போராட்டத்தில் அதன் நீண்ட நடையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தீர்க்கமான பங்களிப்புக்கள் இல்லாமல் சாத்தியமாகியிராது எனக் கூறுவது, எந்தவிதத்திலும் கூட்டி மதிப்பிடுவதாகாது.

அனைத்துலகக் குழுவின் வரலாற்றுடன் அறிமுகமானவர்கள் வேர்க்கஸ் லீக்குக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் இடையே மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஐக்கியத்துக்கான பந்தம் உருவாக்கப்பட்டதை அறிவர். முதலாவதாக 1963 ஜூனில் அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி பப்லோ, மண்டேல் தலைமையிலான அனைத்துலகச் செயலகத்துடன் கொள்கையற்ற மறுஐக்கியத்துக்கு சென்றமைக்கும், இரண்டாவதாக 1964 ஜூனில் லங்கா சமசமாஜக் கட்சி திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்துள் நுழைந்தமைக்கும் எதிரான போராட்டங்களின் வரலாற்றுப் பின்னணியிலேயே வேர்க்கஸ் லீக், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இரண்டும் தோன்றின.

வேர்க்கஸ் லீகின் ஸ்தாபகர்கள் சோசலிசத் தொழிலாளர் கட்சியின ஒரு சிறிய ட்ரொட்ஸ்கிசக் குழுவினரை கொண்டிருந்தனர், இவர்கள் பப்லோ, மண்டேலின் சந்தர்ப்பவாத அனைத்துலக அமைப்புடனான மறுஐக்கியத்தினை எதிர்த்ததோடு ஓராண்டின் பின்னர் இதன் பேரழிவுமிக்க விளைவுகள் உணரப்பட்ட வேளையில் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பை வன்மையாக எதிர்த்தனர். இந்தக் காட்டிக் கொடுப்பின் மூலங்களையும் 1963ன் கொள்கையற்ற மறுஐக்கியத்துடனான திட்டவட்டமான உறவுகளையும் ஆராய ஒரு கலந்துரையாடலைக் கோரியமை அவர்களைச் சோசலிச தொழிலாளர் கட்சியில் இருந்து வெளியேற்றவும், 1966ல் வேர்க்கஸ் லீக்காக உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்ட நான்காம் அகிலத்தின் அமெரிக்கன் கமிட்டியின் ஸ்தாபிதத்துக்கும் இட்டுச் சென்றது.

6000 மைல்களுக்கு அப்பால் இத்தகைய ஒரு புரட்சிகர எதிர்ப்புப் போக்கும் மறுஅணிதிரள்வும் இடம்பெற்று வந்தது. முதலில் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்புக்கும் பின்னர் பாலா தம்புவின் மத்தியவாத தலைதப்பல்களுக்கும் நழுவல்களுக்கும் எதிரான போராட்டம் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஸ்தாபிதத்துக்கு இட்டுச் சென்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிறுவப்பட்ட அடி அத்திவாரத்தின் பலம் அதன் அடுத்து வந்த முழு வரலாற்றினால் பிரத்தியட்சமாக்கப்பட்டது. உலக வரலாற்றின் இராட்சத அளவுகோல்களில் 25 ஆண்டுகள் சொற்பமானவை என்பதில் சந்தேகமில்லை என்பது உண்மையே, ஆனால் 25 ஆண்டுகள் இன்னமும் 25 ஆண்டுகளே, புரட்சிகரமானவை எனக் கூறிவந்த எத்தனை அரசியல் அமைப்புக்கள் இதைவிட மிகவும் குறுகிய காலத்துக்கேனும் தமது செல்வாக்கினையோ. அல்லது புகழையோ அழிபாடுகளில் இருந்து காத்துக் கொண்டுள்ளன? கடந்த தசாப்தத்தில் மட்டும் வரலாறு தம்மைத் தொழிலாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் நலன்களின் பிரதிநிதிகளெனக் கூறிவந்த எண்ணற்ற அமைப்புக்களுக்கு இரக்கமற்ற தாக்குதல் தொடுத்துள்ளது. ஒரு சில வருடங்களுக்கு முன்னர் இலட்சோப லட்சம் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதாகக் கூறிக் கொண்ட கட்சிகள் புவியில் இருந்து மறைந்துவிட்டதோடு, முன்னர் அவற்றில் செல்வாக்கான பதவிகளை வகித்த பரந்த அதிகாரத்துவத்துவத்தினரால் மட்டுமே அவற்றின் மரணத் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வண்ணம் அவமானம் நிறைந்த முறையில் சிந்தவை ஸ்டாலினிஸ்டுகளதும் சமூக ஜனநாயக வாதிகளதும் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் மட்டுமல்ல.



டேவிட் நோர்த்

கடந்த 10 ஆண்டுகளின் நிகழ்வுகளும், முதலாளித்துவ தேசியவாதிகளதும். தீவிரவாத, குட்டி முதலாளிகளதும் 'தேசிய விடுதலை' இயக்கங்கள் எனப்பட்ட சகலதினதும் அரசியல் வங்குரோத்தினையும் ஏகாதிபத்தியம் மீதான உயிர்பிழைப்பு சார்பினையும் அடியோடு உரித்துக் காட்டியுள்ளது. இறுதி ஆய்வுகளில் அவற்றின் சமரசமின்மை எனப்பட்டது ஒன்றில் சோவியத் அதிகாரத்துவத்தின் ஆதரவில் அல்லது ஏதோவொரு ஏகாதிபத்தியச் சக்தியின் ஆதரவிலேயே முற்றிலும் தங்கியிருந்தது. எந்தவொரு விடயத்திலும் அத்தகைய எந்தவொரு இயக்கமும் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்ட வெகுஜனங்களின் ஜனநாயக அபிலாசைகளை நிஜமாக அடைவதற்கோ அல்லது பயங்கரமான சமூகப் பிரச்சினைகளைப் போக்கவோ ஒரு வேலைத் திட்டத்தினை முன்வைத்தது கிடையாது,

ஆனால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கடந்த 25 ஆண்டுக் காலப் போராட்டங்களில் நின்றுபிடித்ததோடு மட்டுமன்றி அது தனது அரசியல் பலத்தையும் அந்தஸ்தினையும் நிலையாக அதிகரித்துக் கொண்டுள்ளது. 1968ல் இருந்து பு.க.க. ஒரு பரந்த அளவிலான அரசியல் அனுபவத்தினைத் திரட்டிக் கொண்டுள்ளது. அது இலங்கையின் அரசியல் வாழ்வின் வெடிப்பு நிறைந்த சுகதுக்கங்களைப் பிரதிபலிக்கின்றது, மிகவும் மாறுபட்டதும் கஷ்டமானதுமான நிலைமைகளின் கீழ் பு.க.க. ஒரு உறுதியான மார்க்சிச, புரட்சிகர நிலைப்பாட்டை முன்வைத்து வந்துள்ளது. மேலும் காட்டுமிராண்டி சோவினிச கலவரங்கள், இரத்தம் தோய்ந்த இனவாத யுத்தத்தின் முன்னிலையிலும் பு.க.க. தமிழ் மக்களின் ஜனநாயக அபிலாசைகளைக் காக்கும் ஈடாட்டமின்மையையும் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் சகல உள்ளூர் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ ஏஜன்டுகளுக்கும் எதிரான பொதுப் போராட்டத்தில் சிங்கள, தமிழ் தொழிலாளர்களின் புரட்சிகர ஐக்கியத்திற்கான சமரசமற்ற அர்ப்பணத்தினையும், நிதர்சனமாக்கியது. இலங்கை—தமிழீழம் ஐக்கிய சோசலிச அரசுகளுக்கான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அழைப்பு இன்றுள்ள சகல முதலாளித்துவக் கட்சிகள், அமைப்புக்களின் சோவினிசமும், இனவாதக் குறுங்குழுவாதங்களையும் தாண்டி சிங்கள—தமிழ் வெகுஜனங்களின் பொதுப் பிரச்சினைகளுக்கு மதிப்பும், நின்றுபிடிக்கக் கூடியதுமான ஒரே தீர்வினை முன்வைக்கின்றது.

இலங்கையின் உள்ளே பு.க.க. தொடுத்த போராட்டத்தின் அரசியல் பலம், அது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பணிகளில் ஆற்றிய தீர்க்கமான பாத்திரத்துடன் பிரிக்கமுடியாத விதத்தில் இணைந்து கொண்டுள்ளது. அனைத்துலகக் குழுவின் சகல சக சிந்தனையாளர்களுடன் முறையான தொடர்புகளைக் கொண்டிருக்கவும் தனது கருத்துக்களை வெளிவெளியாகக் கலந்துரையாடவும் சகல வாய்ப்புக்களும் மறுக்கப்பட்ட போதிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் அரசியல் பின்னடிப்புக்களை எதிர்த்து நின்றது. ஹீலி, சுலோட்டர், பண்டாவின் சந்தர்ப்பவாத போககுக்கு எதிரான வெளிப்படையான எதிர்த்தாக்குதலுக்கான சாத்தியம் 1985ல் ஏற்பட்ட போது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், கீர்ததி பாலசூரியவின் தலைமையில் அனைத்துலகக் குழுவின் புரட்சிகர மறுமலர்ச்சிக்கு ஒரு தீர்க்கமான பாத்திரத்தினை வகித்தது.

1987 டிசம்பர் 18ல் தோழர், கீர்த்தியின் திடீர் அகால மரணம், பு.க.க. வுக்கும் முழு அனைத்துலகக் குழுவுக்கும் ஒரு கொடிய பேரடியாக விளங்கிற்று. எம் மத்தியில் இருந்த ஒரு கூரிய மார்க்சிசக் கோட்பாட்டாளரும் உறுதியான போராளியும் இழக்கப்பட்டார், தோழர், கீர்த்தியின் மரணம் தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரான புதியதொரு பாசிச ஜேவீபி பயங்கரவாதிகளின் அலைவீச்சினிடையே ஏற்பட்ட போதிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தலைமைப் பீடம் இந்தப் பயங்கரமான இழப்பில் இருந்தும் கூடத் தலையெடுத்தது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஜேவீபியின் கொலைகாரத் தாக்குதல்களுக்குத் தோழர்கள். பிட்டவெல, குணபால, கிறேசனை இழக்க நேரிட்டது. இந்தத் தாக்குதல்கள் லங்கா சமசமாஜக் கட்சியினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் எதிர் [illegible] இடையே இடம்பெற்ற போதிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிக்கான போராட்டம் தொழிலாளி வர்க்கத்தினை

அளப்பரிய முறையில் பலப்படுத்தியதே ஸ்கிசத்தின் ஆளுமையையும் அதிகரித்த

நாம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பயணத்தில் ஈட்டிக்கொண்டுள்ள அனை யமான முறையில் பெருமிதம் அடை அதன் மறைந்த தலைவர் கீர்த்தி அனைத்துலக சோசலிசத்துக்காகத் த அர்ப்பணம் செய்த தியாகிகளையும் ம கூர்கின்றோம். அனைத்துலகப் பாட்டா பல தசாப்தங்களாக தியாகமும், சேவை ஆற்றியுள்ள பரீட்சிக்கப்பட்ட இங்கு தோழர். விஜே, தோழர். ர ஊக்கம் நிறைந்த ஸ்தாபக அங்கத் பாராட்டுகின்றோம்.


இம்மாபெரும் ஆண்டு நிறைவு கொண்டாடுகின்ற வேளையிலும் மி சவால்கள் எதிரே உள்ளன என்பதை அறிவோம், நாம் முயற்சிப்பது வெ கொண்டிருக்க அன்று, வெற்றியீட் எமது இலக்கு, தொழிலாளி வர்க்கத்தி ஆன்மீக விடுதலையை புரட்சிகரமான யீடுவதே மேலும் இலங்கைக்கு உள் னிஸ்ட் கழகத்தின் பணிகளின் வெற்றி ஆசியா பூராவும் அனைத்துலகக் குழு வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என்பதை ஆசியா பூராவும்—எல்லாவற்றுக்கும் மே ட்ரொட்ஸ்கிசத்தின் பரம்பலுக்கு அ புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நேரடி தும் தங்கியுள்ளது.

இவ்வாண்டின் இறுதியில் நாம் வே நிறைவுகளை —அனைத்துலகக் குழுவி 40வது ஆண்டு நிறைவும், இடதுசாரி ஸ்தாபிதத்தின் 70வது ஆண்டு நிறை போம். இச்சகல ஆண்டு நிறைவுகளும் தொடர்பின் அத்தியாவசியமான தரு தித்துவம் செயகின்றன. அந்த விதத் வரலாறு ட்ரொட்ஸ்கி 1923ல் அக்டே வேலைத்திட்டமும் முன்னோக்கும் ஸ்ட கெடுக்கப்பட்டதற்கு எதிராக ஆரம்பி தின் பெறுபேறும் சமகால வெளிப்பா

★ புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

★ நான்காம் அகிலத்தின் அனைத் வாழ்க!

புரட்சிகர வாழ்
டேவிட் நோர்



25 ஆண்டு அரசியல் போராட்ட வரலாற்றுக் கண்காட்சியும் அதைக் காண வந்தோரில் ஒரு பகுதியினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கின்

...படுத்தியதோடு நிஜட்ரொட்
... அதிகரித்தது.

...ட் கழகம் அதன் வரலாற்றுப்
...ள்ள அனைத்தையுமி டு நியா
...தம் அடைகின்றோம். நாம்
...ர் கீர்த்தி பாலசூரியவையும்
...துக்காகத் தமது உயிர்களைத்
...ளையும் மதிப்புடன் நினைவு
...கப் பாட்டாளி வர்க்கத்துக்கு
...யாகமும், முன்மாதிரியுமான
...சிக்கப்பட்ட தலைவர்களை—
...தோழர். ரத்நாயக்க மற்றும்
...பக அங்கத்தவர்கள் — நாம்

... நிறைவு விழாவினை நாம்
...ளயிலும் மிகவும் கஷ்டமான
... என்பதை நாம் அனைவரும்
...சிப்பது வெறுமனே சகித்துக்
... வெற்றியீட்டிக் கொள்ளவே.
...ி வர்க்கத்தின் ஆட்சி, சட,
...ட்சிகரமான முறையில் வெற்றி
...கைக்கு உள்ளே புரட்சிக் கம்யூ
...ளின் வெற்றி, இந்தியாவிலுப
...துலகக் குழுவின் உறுதியான
...ளது என்பதை நாம் அறிவோம்.
...ற்றுக்கும் மேலாக இந்தியாவில்
...லுக்கு அனைத்துலகக் குழு
...த்தின் நேரடி முயற்சியில் பெரி


...யில் நாம் வேறு இரண்டு ஆண்டு
...லகக் குழுவின் ஸ்தாபிதத்தின்
... இடதுசாரி எதிர்க் கட்சியின்
...ஆண்டு நிறைவும் —அனுஷ்டிப்
...நிறைவுகளும் ஒரே வரலாற்றுத்
...யமான தருணங்களைட் பிரதிநி
... அந்த விதத்தில் பு.க.க. வின்
...923ல் அக்டோபர் புரட்சியின்
...னாக்கும் ஸ்டாலினால் காட்டிக்
...ிராக ஆரம்பித்த போராட்டத்
...ல வெளிப்பாடும் ஆகும்.

...ஸ்ட் கழகம் நீடூழி வாழ்க!

...தின் அனைத்துலகக் குழு நீடூழி

...சிகர வாழ்த்துக்களுடன்
...பிட் நோர்...





# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்...


(5ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட ஒரு தூதுக் குழு அடுத்த மாதத்தில் ஜேர்மனியில் நடைபெறவுள்ள கோடைக்காலக் கோட்பாட்டு முகாமில் கலந்து கொள்ளவுள்ளது. (கரகோஷம்)

தோழர்களே, நீங்கள் அறிந்தது போல் எமது இயக்கத்தின் வரலாற்றில் மாபெரும் அரசியல் முக்கியத்துவம் மிக்க ஆண்டு நிறைவினை— இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் 1953ல் அனைத்துலகக் குழு நிறுவப்பட்டதை— இந்த ஆண்டின் கடைப்பகுதியில் நாம் கொண்டாடுவோம். ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் சுயசீர்திருத்தம் பற்றிப் பேசிய பப்லோவினதும் மண்டேலினதும் மாபெரும் கோட்பாடுகளுக்கு என்ன நடந்தது? உலகம் பூராவும் ஸ்டாலினிஸ்டுகளின் சர்வாதிகாரங்கள் சிதறுண்டு போனதோடு வரலாறு பப்லோவாதம் பற்றிய தனது தீர்ப்பினை வழங்கியுள்ளது. தான் குற்றமிழைத்த இடத்துக்குத் திரும்பி வருகின்ற ஒரு கொலையாளியைப் போல் மண்டேல் திரும்பவும் இலங்கைக்கு வந்து நவசமசமாஜ கட்சியைத் தனது ஐக்கிய செயலகத்தின் ஒரு கிளையாகச் சேர்த்துக் கொண்டுள்ளார். மண்டேலும் அவரின் முழு ஐக்கிய செயலகமும் ஒரு தொகை முதலாளித்துவ அரசியல்வாதிகளைக் கொண்ட ஒரு கும்பலேயன்றி வேறொன்றும் அல்ல என்பதைக் காட்ட இதைவிடத் தெளிவான வேறொன்றும் கிடையாது. சமீபத்தில் ஜேர்மனியில் வெளியிடப்பட்ட அவரின் ஒரு நூலில் உலகின் பல்வேறு பாகங்களில் உள்ள சர்வாதிகாரிகளுக்கு எதிராகப் படைகளை அனுப்புமாறு அவர் ஐக்கிய நாடுகள் சபையிடம் கேட்டுக் கொண்டுள்ளார். கோல் அரசாங்கத்தினது. அல்லது கிளின்டன் அரசாங்கத்தினது முதலாளித்துவ விதிமுறை இதில் இருந்து அணுவளவும் வேறுபட்டதல்ல.

## பெருமை மிக்க வரலாற்று அரசியல் அர்த்தம்

தோழர்களே, கடந்த இரண்டரைத் தசாப்தங்களாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்



25வது ஆண்டு நிறைவுக் கூட்டத்துக்கு வருகை தந்தோரில் ஒரு பகுதியினர்

நடாத்திய பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்துக்கான இந்தக் கொள்கை ரீதியான போராட்டம், இன்று மிகவும் பலம் வாய்ந்த முறையில் மக்களுக்கான பிரமாண்டமான புறநிலை அரசியல் அர்த்தம் கொண்டதாக மாறியுள்ளது.

கடந்த நூற்றாண்டின் கடைப்பகுதியிலும் இந்நூற்றாண்டின் முதல் தசாப்தத்திலும் இடம்பெற்ற பிரமாண்டமான கைத்தொழில் மயமாக்கத்தின் அபிவிருத்தியின் பின்னர் உலக முதலாளித்துவ உற்பத்தி பெரும் தீர்க்கமான மாற்றங்களூடாகப் பயணம் செய்து கொண்டுள்ளது. முதலாளித்துவம், உலகச் சந்தையின் அடிப்படையிலேயே வளர்ச்சி கண்டது. பழைய நிலமானித்துவப் பொருளாதாரங்களைத் தகர்த்து, முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்த நடைமுறைகளுக்கான உந்து சக்தியை, உலக சந்தை திறக்கப்பட்டமையே வழங்கியது. இந்த அபிவிருத்திகளின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட அடிப்படை அரசியல், பொருளாதார அமைப்பாக தேசிய அரசு விளங்கியது. வர்த்தக, நிதி நடவடிக்கைகள் அனைத்துலக ரீதியில் வளர்ச்சி கண்டதோடு ஏற்றுமதிக்காகவோ அல்லது உள்நாட்டுச் சந்தைக்காகவோ நடைபெற்ற உற்பத்தி தனி நாட்டின் எல்லைக்குள்ளேயே இடம்பெற்றது.

இது தொடர்ந்தும் அங்ஙனம் நடைபெறாது. கடந்த 20 ஆண்டுகள் பூராவும் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் மூலம் அனைத்துலக ரீதியில் ஒழுங்கு செய்யப்படும் உற்பத்தி நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு இதற்கு முன்னைய காலப்பகுதியில் இடம்பெற்று வந்த உழைப்புப் பகுப்பு மாற்றம் கண்டுள்ளது.

இவை மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, யப்பான் போன்ற முன்னேறிய முதலாளித்துவ நாடுகளைக் கொண்ட ஒரு மையத்தினுள் உற்பத்தியை நடாத்துகின்றதும் ஏனைய காலனித்துவ நாடுகளில் இருந்து மூலப் பொருட்களையும் எரி பொருட்களையும் உறிஞ்சிக் கொள்ளும் உழைப்புப் பகுப்பினைக் கொண்டும் இருந்தது. இந்த உழைப்புப் பகுப்பு முழுமனே பரிணாமம் அடைந்துள்ளது

இன்று காண்பதோ உலக உழைப்பு சந்தை: உலக உபரி கைத்தொழில் உழைப்புப் படை; அவ்வாறே உற்பத்திப் பூமிக்கான உலகப் போட்டி.

இந்தப் பரிணாமங்கள் உற்பத்திச் சக்திகளின் உலகத் தன்மைக்கும் தேசிய அரசுகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அமைப்புக்களுக்கும் இடையேயான முரண்பாடுகளை உக்கிரமடையச் செய்துள்ளன. இந்தப் பிரச்சினைகளைப் பற்றி முதலாளி வர்க்கம் கூறிக் கொண்டுள்ளவற்றுக்குச் சற்று செவிமடுங்கள்: ஜப்பானின் மக்கன்சி அன்ட் கம்பனியின் தலைவர் கெனிசி ஒயாமா கூறியுள்ளது இதுதான்; ''எல்லையற்ற உலகில் மனித நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதையும் பொருளாதார நடவடிக்கைகளை முகாமைப்படுத்துவதையும் மனங் கொள்ளும்போது தேசிய அரசானது செயற்கையானதும் நாசகரமானதுமான ஒரு அலகாக மாறியுள்ளது,''

அவர் மேலும் கூறுவதாவது: ''பூகோளப் பொருளாதாரப் படத்தில் இன்று முக்கியத்துவம் பெறும் கோடுகள் 'பிராந்திய அரசுகள்' என அழைக்கப்படக் கூடிய அரசுகளைக் காட்டுபவையே'',

இந்தப் பிராந்திய அரசுகளில் ஹொங்கொங், தென் சீனா மட்டுமல்ல சிங்கப்பூரும் அதற்கு அண்மையில் அமைந்துள்ள இந்தோனேசிய தீவுகளும் வட இத்தாலியும் அடங்கும், அவ்வாறே பல ஒடுக்கப்படும், பின்தங்கிய நாடுகளின் புதிய பொருளாதார வலயங்களும் அதில் அடங்கும்,

சகல பின்தங்கிய நாடுகளிலும் தேசிய முதலாளி வர்க்கங்களும் தேசிய விடுதலை இயக்கங்களின் தலைவர்களும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கான சிறந்த நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் பொருட்டு கையாலாகாத்தனமான முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் ஏகாதிபத்தியத்தின் நிஜ ஏஜன்டுகளாகத் தொழிற் படுகின்றார்கள்.

தோழர்களே, தேசிய அல்லது பிரிவினைத் தீர்வுகள் கிடையாது எனவும் இன்று உள்ள ஒரே தீர்வு சோசலிசப் புரட்சியின் பொதுப் போராட்டத்தின் அடிப்படையில் ஒடுக்கப்படும், ஒடுக்கும் தேசிய இனங்களின் தொழிலாள வர்க்கத்தினை ஐக்கியப்படுத்துவதே எனவும் கூறும் எமது முன்நோக்கு, இந்நிலையில் மாபெரும் முக்கியத்துவம் பெறுகின்றது. வரலாற்றில் முன்னொருபோதும் பின்தங்கிய நாடுகளில் அதாவது ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்பட்ட நாடுகளின் தொழிலாளி வர்க்கமும் ஏகாதிபத்திய மையங்களில் உள்ள தொழிலாளி வர்க்கமும் இவ்வளவு நெருக்கமாக ஒன்றிணைந்து தொடர்பு பட்டிருந்தது கிடையாது,

## ஜேர்மனியில்

நான் முன்னர் பொருளாதார மாய உலகு எனக் கூறப்பட்ட ஒரு நாட்டில் இருந்து வந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள் இற்றைக்கு மூன்று வருடங்களின் முன்னர் ஜேர்மனி மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டதன் பின்னர். இந்தப் பொருளாதார மாய உலகு முன்னொரு போதும் இல்லாத பொருளாதார, சமூக பேரழிவாக பரிணாமம் அடைந்துள்ளது. நேற்று நான் உங்களின் தலைநகரமான கொழும்பின் வீதிகள் வழியே பயணம் செய்தேன். அப்போது ஒரு புறத்தில் படுமோசமான வறுமையும் மறுபுறத்தில் பாரிய செல்வ நிலையும் ஒன்றுக்கொன்று நெருக்கமாக இருக்கக் கண்டேன். ஒருபுறத்தில் 'சுப்பர்' செல்வந்தர்களும், வங்கியாளர்களும் ஊக வர்த்தகர்களும் பக்டரியாளர்களும் அரசியலாளர்களும் மற்றும் குற்றவாளிகளும் மறுபுறத்தில் நாளாந்தம் மேலும்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் வறுமைக்குள் தள்ளப்படும் தொழிலாளி வர்க்கப் பொதுஜனங்களாகவும் சமூகத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு இன்று சகல கண்டங்களிலும் காணப்படும் ஒரு தோற்றப்பாடாகும்.

ஜேர்மனியின் நிலைமையைப் பற்றிக் கவனம் செலுத்துவோம். இன்று பொருளாதார நெருக்கடி 1930பதுகளைக் காட்டிலும் மிகவும் ஆழமாகியுள்ளது, வேலையற்றோரின் எண்ணிக்கை 60 இலட்சம். இதற்கு மேலாக இன்னுமோர் 15 இலட்சம் பேர் குறுங்கால வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். கிழக்கு ஜேர்மனியில் உள்ள இன்னுமோர் 6 இலட்சம் பேர் தினமும் 8 மணித்தியாலம் பயணம் செய்து மேற்கு ஜேர்மனிக்குத் தொழிலுக்கு வருகின்றனர். ஜேர்மனி மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டதன் பின்னர் கிழக்கு ஜேர்மன் உற்பத்திகைத்தொழில் வேலைகளில் மூன்றில் இரண்டு பங்கு அழிக்கப்பட்டது.

தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான மிகவும் கொடிய தாக்குதலை நடாத்தும் பொருட்டு அரசாங்கம் தொழிலாளி வர்க்கத்தினைப் பிளவுபடுத்தும் முகமாக முன்னொரு போதும் இல்லாத இனவாதப் பிரச்சாரத்தினை ஆரம்பித்துள்ளது. ஜேர்மனியில் இங்குள்ளது போல் ஒரு நாட்டினுள் இரண்டு தேசிய இனங்கள் இல்லை. இருப்பினும் அரசாங்கம் பிரமாண்டமான இனவாதப் பிரச்சாரத்தினைத் தொடுத்துள்ளது. அரசாங்கம் சமூக ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்து, அடைக்கலம் கோருபவர்களும் அரசியல் அகதிகளும் நாட்டினுள் நுழைய முடியாத விதத்தில் அவர்களுக்கு எதிரான புதிய சட்டத்தினை நிறைவேற்றியுள்ளது.



25வது ஆண்டு நிறைவுக் கண்காட்சியை பார்வையிடும் அலைத்தசைப் பேராளர் உலி

இந்த இனவாதச் சட்டத்தின் அடிப்படையில் பாசிச இயக்கங்கள் ஜேர்மனியில் இருக்கும் சுமார் 60 இலட்சம் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு எதிரான பயங்கரவாத இயக்கத்தினை ஆரம்பித்துள்ளன. ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சிக்கு வந்து 60 ஆண்டுகள் பூர்த்தியடையும் இச்சந்தர்ப்பத்தில் திரும்பவும் ஒரு முறை பாசிஸ்டுகளால் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் தீமூட்டல்களுக்குள் மக்கள் இறந்து போவதைக் காண முடிகின்றது. இதற்கான பொறுப்பினை மீண்டும் ஒரு தடவை தொழிலாளி வர்க்கத்தின் பழைய அமைப்புக்களின் அதிகாரத்துவங்களே ஏற்க வேண்டும். அவர்கள் தேசியவாத அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தினைப் பிளவுபடுத்தச் செயற்படுகின்றார்கள்.

ஆனால் தோழர்களே இத்தடவை பாசிஸ்டுகள் வெற்றி பெறப் போவதில்லை. நாம் அதைத் தடைசெய்வோம். இனவாதத்துக்கும் யுத்தத் தயாரிப்புக்களுக்கும் எதிராகப் பிரமாண்டமான பிரச்சார இயக்கத்தினை நாம் ஆரம்பித்ததோடு அதற்காக இளைஞர்கள், தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் பலம் வாய்ந்த ஆதரவினை வெற்றி கொண்டுள்ளோம். இது, ஆளும் வர்க்கம் ஸ்டாலினிச, சமூக ஜனநாயக அதிகாரத்துவங்கள் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் மேல் காலுன்றி நிற்க முடிந்த 1930 பதுகள் அல்ல. இந்த அதிகாரத்துவங்கள் பரந்த அளவில் சிதறுண்டு வருகின்றன. ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஏற்கனவே சிதறுண்டு போயுள்ளது. சமூக ஜனநாயக வாதிகள் சமீபத்தில் நடைபெற்ற பிராந்தியத் தேர்தல்களில் பெரும் தோல்வி கண்டதோடு, கடந்த ஆண்டில் மட்டும் தொழிற்சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கை 8 இலட்சத்தினால் வீழ்ச்சி கண்டது.

பழைய அதிகாரத்துவங்களதும் சீர்திருத்தவாத அதிகாரத்துவங்களதும் இந்தவீழ்ச்சி, தொழிலாளி வர்க்கத்தினுள்ளும் இளைஞர்களிடையேயும் ஆதரவினை வென்றெடுப்பதற்கான எமது நடவடிக்கைகளுக்குப் பிரமாண்டமான சக்தி வாய்ந்த அரசியல் நிலைமைகளைச் சிருஷ்டித்துள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணியினை இட்டு நிரப்பியநான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கொள்கை சார்ந்த போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் அடுத்த காலகட்டத்தில் முதலில் தொழிலாள வர்க்கத்தின் மிகவும் முன்னேறிய பகுதியினரிடையேயும் அவர்களூடாக உலகம் பூராவும் உள்ள ஒடுக்கப்படும் மக்களிடையேயும் அரசியல் ஈர்ப்பினை உண்டுபண்ணும் என்பதில்எதுவித சந்தேகமும் கிடையாது.

நாம் நடாத்திய போராட்டத்தின் வளம் பொருந்திய வரலாற்றினையும், வளம் கொழிக்கும் மரபுரிமையையும் அடிப்படையாகக் கொண்டு அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தின் உள்ளே மார்க்சிச கலாச்சாரத்தினை மீள மறுமலர்ச்சி செய்ய நாம் செயற்படுவோம். இப்போராட்டத்தினுள் உங்களுடன் இணைந்து நிற்பதையிட்டும் உங்களுடன் ஒரே கட்சியில் — அதாவது உலக சோசலிஸ்ட் புரட்சிக் கட்சியில் அங்கத்தவனாக இருப்பதையிட்டும் நான் பெருமைப்படுகின்றேன்.


★ புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் கொள்கைசார்ந்த போராட்டம் நீடூழி வாழ்க!

★ அனைத்துலகக் குழுவுக்கும் உலக சோசலிச புரட்சிக்குமான போராட்டம் நீடூழி வாழ்க! தோழர்களே, உங்களுக்கு அளப்பரிய நன்றிகள்.

# 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' யுத்த செய்தி தொடர்பு நிலைய வேலை துரிதம் கண்டுள்ளது

டீ. பி. விஜேதுங்க ஜனாதிபதியானதைத் தொடர்ந்து சிலாபம் இரணவிலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அமெரிக்க 'வொயிஸ் ஒப் அமெரிக்க' யுத்தச் செய்தித் தொடர்பு நிலைய வேலைகள் துரிதமடைந்துள்ளன.

மீனவர் கிராமமான இந்த இரணுவிலவில் ஆக்கிமிப்பு சேவை நிலையம் நிர்மாணிக்கப்படுவதற்கு மீனவர்களதும், ஏழைகளதும் எதிர்ப்பு வலுவடைந்து வருகின்றது, மீனவர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் விதத்தில் வாகனங்கள் செல்ல முடியாத விதத்தில் வீதியின் குறுக்கே படுத்துக் கொள்ளும் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன. வளமான தென்னை விளைநிலமாக விழங்கிய இரணவிலவில் ஏற்கனவே 30000 க்கும் அதிகமான தென்னைகள் புரட்டி எறியப்பட்டுள்ளன. பிரமாண்டமான 'புல்டோசர்' களைக் கொண்டு நிலம் சுத்திகரிக்கும் வேலையில் ஏகாதிபத்தியவாதிகள் ஈடுபட்டுள்ளனர். தெருக்களை விஸ்தரிக்கும் நடவடிக்கைகள்




சிலாபம் இரணவிலவில் நிர்மாணிககப்பட்டு வரும் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' வேலைத் தளத்தின் நுழை வாசல்

காரணமாக ஏழைக் குடியானவர்களின் குடிசைகள் நாசமாக்கப்பட இருப்பதாக பிரதேசவாதிகள் 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் தெரிவித்தனர். முன்னர் இந்த ஏகாதிபத்திய வேலைத் தளத்தில் வேலை செய்ய சாரம் அணிந்த தொழிலாளர்களையும் திரட்டி வந்தனர். இப்போது களிசான் அணிந்தால் மட்டுமே வேலைக்குத் திரட்டுவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர். இம்முழுப் பிராந்தியமும் அமெரிக்க யுத்த முகாமின் ஆட்சிக்குட்பட்ட பிராந்தியமாகும் மிரட்டல் தினமும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

1985 - 86 ல் இருந்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த யுத்த செய்தி தொடர்பு நிலையம் நிறுவப்படுவதற்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நின்று வந்துள்ளது. இதன் அரசியல் அச்சுறுத்தல்களை தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களுக்கு விளக்கிய பு.க.க. உறுப்பினர்கள். இப்போராட்டத்தினைச் சூழ அனைத்துலகத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் முன் நோக்கினை முன்வைத்துப் போராடினர். இன்று எமது கட்சி பிரச்சாரகர்களை சந்திக்கும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் 1985 காலப்பகுதியில் நாம் கூறியவை உண்மையாகி உள்ளதாகத் தெரிவித்தனர்.

வாசியுகள்:

**யூ. என். பி. தாக்குதலுக்கு எதிரான போராட்ட வேலைத்திட்டம்**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வெளியீடு
விலை; 7–50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜேதுங்க அரசாங்க இனவாத ஒடுக்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் படுகொடூரமான யுத்தத் தாக்குதல்களில் — கிழக்கு மாகாணத்தில் — இறங்கி புதிய இனவாத ஆத்திரமூட்டல்களுக்குத் தயாராகிக் கொண்டுள்ள ஒரு நிலையிலேயே விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமை, அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களுக்கு நுழைந்துகொள்ளத் துடிக்கின்றது. கடந்த சில தினங்களாக கிழக்கு மாகாணத்தில் 'கடற் சூறாவளி' என்ற பேரில் நடாத்திய யுத்த நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் பொது மக்களும் சுமார் நூறு பேர் கொல்லப்பட்டதோடு, ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர நேரிட்டது.

'கடற் சூறாவளி'யின் பின்னணியில், வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தினை இணைப்பதற்குச் சம்மதத்தினைக் கண்டறியும் கருத்துக் கணிப்பினை நடாத்த யூஎன்பி அரசாங்கம் தயாராகி வருகின்றது. அரசாங்கத்தின் எடுபிடியான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்மானத்தினை அமுல் செய்வதாகக் கூறியே இதனை நடாத்தவுள்ளது. கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகள் முன்னர் போன்று 'பதில் தாக்குதலில்' ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் விஜேதுங்க அரசாங்கத்தின் யுத்த வீரியம் அன்று; மாறாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்துக்கு விடுத்துள்ள ஒரு சமிக்கையாக இது தென்படுகின்றது.

ஜனாதிபதி பிரேமதாச, ஜ ஜ தே.மு. தலைவர் லலித் அத்துலத்முதலி கொலைகளின் பின்னர் அரசாங்கம் தெற்கில் — சிறப்பாக கொழும்பில் — தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பயங்கர வேட்டையை முடுக்கிவிட்டுள்ளது. தேடுதல்களிலும், முற்றுகைகளிலும் ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டனர். இந்தப் பயங்கரம் தொடர்கிறது. பொலிஸ் நிலையங்களில் கைதானோருக்கு எதிரான சித்திரவதைகளும் இடம்பெற்றுள்ளன.

அரசங்காத்தின் கூலிப்படை இயக்கங்களான தமிழர் விடுதலைக் கூட்டணி, டெலோ, ஈபீ ஆர்எல்எப், புளட், என்பன 'விடுதலைப் புலிகள்' அங்கத்தினரைத் தேடிக் கண்டுபிடிக்க உசிதமான ஒரு முறையை கையாளவும்' என அறிக்கை விடுக்கும் அளவுக்கு இந்தப் பயங்கரம் உக்கிரம் கண்டுள்ளது. தோட்டத்துறையைச் சேர்ந்த 2000 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்த ஒடுக்குமுறையின் பங்காளியான இராஜாங்க அமைச்சர் எம். எஸ், செல்லச்சாமி பாராளுமன்றத்தில் முதலைக் கண்ணீர் வடித்துள்ளார். கைது செய்யப்பட்டோர் சித்திரவதைக்குள்ளானதோடு மட்டுமன்றி, நூற்றுக்கணக்கானோர், விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தடை உத்தரவு

இதற்கிடையே அரசாங்கம் வட—கீழ் மாகாண தமிழ் மக்களுக்கு தென் மாகாணங்களை—சிறப்பாக கொழும்பு மாவட்டத்தை—தடைசெய்யப்பட்ட பிராந்தியமாக்கும் நிலைமைகளைத் தயார் செய்வதில் ஈடுபட்டுள்ளது. இதன்படி தமிழர்கள் கொழும்புக்கு விஜயம் செய்ய 'போதிய' காரணம் இருக்க வேண்டும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்கள், தொலைபேசி அழைப்புக்களின் பேரில் கொழும்பு வருவோர் இனி வவுனியவுடன் நின்று கொள்ள வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து உயிர் தப்ப கொழும்புக்கு வந்துள்ள அகதிகளை உடன் திரும்பிச் செல்லுமாறு அரசாங்கம் விடுத்துள்ள அறிவித்தல் இதன் ஒரு பாகமே,

இத்தகைய இனவாத தாக்குதல்களை உக்கிரமாக்கியுள்ள விஜேதுங்க அரசாங்கத்துடனேயே விடுதலைப் புலிகள் 'சமாதான' பேச்சுவார்த்தைகளுக்கு ஆயத்தமாகின்றனர். கடந்த சில வருடங்களாக விடுதலைப் புலிகள் 'சமாதானத்தை' ஏற்படுத்தும் பேரில் ஏகாதிபத்திய வாதிகளின் தலையீட்டுக்கும் முயற்சி செய்தனர். இந்திய ஆட்சியாளர்கள், அமரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் நெருக்கமான இராணுவ உறவுகளை உருவாக்கிக் கொண்டுள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவரானகிட்டுபயணம் செய்த கப்பல் இந்தியக் கடற்படையினரால் நடுக்கடலில் சிதறடிக்கப்பட்டது தெரிந்ததே. கிட்டு சில மேற்கத்தைய நாடுகளின் ஆட்சியாளர்களது 'சமாதான தீர்வு' களுடன் இக்கப்பலில் வந்த போதே கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. விடுதலைப் புலிகள் தலைமைப் பீடம் விஜேதுங்க அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களுக்குச் செய்யும் முயற்சிகளும் கூட இந்த கையாலாகாத் தனமானதும், பிற்போக்கானதுமான ஏகாதிபத்திய வேலைத்திட்டத்தின் ஒரு பாகமே.

பழைய யூகோசலாவியாவைத் துண்டாடி அமைக்கப்பட்ட அரசுகளின் உள்ளும், பொஸ்னியாவின் உள்ளும் போரிட்டு வரும் தேசியவாதக் கும்பல்கள் ஏகாதிபத்திய கோஷ்டிகளுடன் இணைந்து கொண்டுள்ளதைப் போலவே விடுதலைப் புலிகள் தலைமையும் ஏகாதிபத்திய முகாம்களுடன் கூட்டுச் சேர அணிதிரள்கின்றது. அதே சமயத்தில் அவர்கள் விஜேதுங்கவுக்கும் கைநீட்டுகின்றார்கள்.

விடுதலைப் புலிகள் கூறிக் கொள்வது போல் அவர்கள் 'தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி' அல்ல. அது தொடர்ந்தும், எந்த விதத்திலும் தமிழ் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அமைப்பும் அல்ல. விடுதலைப் புலிகள் இயக்கம், ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அமைப்பாக நாற்றம் எடுத்துள்ளது. விஜேதுங்க அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் வட—கீழ் மாகாணத் தமிழ் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்தியச் சார்பு ஒடுக்குமுறையாளரின் ஒடுக்கு முறைக்கு ஆளாக்கி, தமக்கு எலும்புத் துண்டு தேடிக் கொள்ளும் ஒரு முயற்சியாகும். அத்தகைய ஒரு முயற்சி தமிழ் ஒடுக்கப்படும் மக்களைத் திரும்பவும் படுமோசமான இரத்தக் களரிக்குப் பலியிடுவதற்கான கதவுகளை அகலத் திறப்பதாக விளங்கும். அவ்வாறே விடுதலைப் புலிகள் அமைத்துக் சொள்ளும் 'தனி நாடு' இத்தகைய இரத்தக் களரியை இப்பிராந்தியத்தில் சிருஷ்டிக்கின்றதும் ஏகாதிபத்தியவாதிகளின் கைத்தேங்காயாக மாறுகின்றதுமான ஒரு தலைவிதியைக் கொண்டுள்ளது.

இத்தகைய படுமோசமான இனவாத மக்கட்படுகொலை யுத்தத்தினை நடாத்திக் கொண்டே யூஎன்பி அரசாங்கம் 'சமாதானம்' பற்றி அக்கறை கொண்டுள்ளதாக கூறிக்கொள்கின்றது. பொலிஸ் படையினரை விடுதலை செய்வதற்குப் பதிலீடாக தடை செய்யப்பட்ட பொருட்களில் சிலவற்றை வடக்கே அனுப்ப அரசாங்கம் எடுத்துள்ள முடிவு, தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் தொடர்பாக ஜனாதிபதி விஜேதுங்கவுக்குத் திடீரென பிறந்த கருணையினால் உருவானது அல்ல.

## ஏகாதிபத்திய முடிவு

முழுத் தீவினையும் ஏகாதிபத்திய ஏகபோகங்களின் ஆளுமைக்கு உள்ளாக்க விஜேதுங்க அரசாங்கம் புதிய அரசியல் உபாயங்களை ஆராய்ந்து வருகின்றது. பிரேமதாச அரசாங்கம் நடைமுறைப்படுத்திய மிலேச்சத் தாக்குதல்களையும் தாண்டும் வகையிலான ஒரு தொகை காட்டுமிராண்டித் தாக்குதல்களை விஜேதுங்க அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளையின் பேரில் ஆரம்பித்துள்ளது. ஜூன் 19ம் திகதி ஏகாதிபத்திய வாதிகளின் 'உதவி வழங்கும் குழு'வின் கூட்டத்தில் ஏகாதிபத்திய வாதிகள் இவ்விடயத்தையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர், உழைப்பினைக் கொள்ளை இலாபத்துக்கு விற்றுத் தள்ள விஜேதுங்க அரசாங்கம் ஏனைய நாடுகளின் முதலாளிகளுடன் போட்டியிட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே வடக்கு—கிழக்கு—தெற்கு மாகாணங்களில் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை ஈவிரக்கமின்றி நசுக்கித் தள்ளும் இராணுவ சர்வாதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்துவது ஆளும் வர்க்கத்துக்கு அவசியமாகின்றது. விடுதலை புலிகளின் தலைவர்களுடனான அரசியல் கொடுக்கல் வாங்கல்களில் விஜேதுங்க இதற்காகவே பந்தயம் பிடிக்கின்றார்.

பாரிசில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர் இந்தியா சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பத்திரிகையாளரான வெங்கட் நாராயணனுக்கு ஜூன் 23ம் திகதி வழங்கிய பேட்டியில் 'நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு' பிரபாகரனுக்கு அழைப்பு விடுப்பதாகக் கூறியுள்ளார்.

இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் வட—கிழக்கு மாகாண ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்தவிதமான சமாதானமும் கிட்டாது. இக்கொடுக்கல் வாங்கல்கள் ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களைப் பூர்த்தி செய்யவும் தமது வர்க்க ஆட்சியைக் காத்துக் கொள்ளவும் முதலாளித்துவ அரசாங்கங்களும், முதலாளித்துவக் கும்பல்களும் கையாளும் தந்திரங்களே. ஏகாதிபத்தியாவதிகளின் கட்டளைகளை அமுல் செய்யும் பொருட்டு தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்தி ஒடுக்க இலங்கை முதலாளித்துவ அரசாங்கம் கையாண்டு வரும் முக்கிய ஆயுதம் இனவாத யுத்தமாகும். சமரசம் எனப்படுவது அடுத்த இரத்தக் களரிக்கான தயாரிப்பு நடவடிக்கையாகும். யூ, என்.பி. அரசாங்கத்துக்கும் அது பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை முதலாளி வர்க்கத்துககும் உள்ள ஒரே வேலைத்திட்டம்: வடக்கிலும், தெற்கிலும் உள்ள சிங்கள—தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் பகற்கொள்ளைக்கு விற்றுத் தள்ளுவதே.

உலகச் சந்தைக்காக மோதிக்கொள்ளும் ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள், அரைக் காலனித்துவ நாடுகளில் இன, மதப் பிளவுகளைத் தூண்டிவிட்டு தமது இராணுவத் தலையீட்டுக்கு வழிகோல வெளிவெளியாகவும் மறைமுகமாகவும் தொழிற்பட்டு வருகின்றனர்; இலங்கையிலும் இந்தியாவிலும் ஏகாதிபத்தியவாதிகள் இனவாத மோதுதல்களில் கைபோட்டுக் கொண்டுள்ளனர். இந்தியாவும் இலங்கையும் ஏகாதிபத்தியவாதிகள் எதிர்கால தலையீட்டுக்காகக் கண் வைத்துக் கொண்டுள்ள இரு நாடுகளாகும். அத்தகைய இராணுவத் தலையீடுகளில் ஏகாதிபத்தியவாதிகள் தம் முன்னால் வயிறளக்கும் விஜேதுங்க அரசாங்கம், விடுதலைப் புலிகள், பற்றும் முதலாளித்துவக் கும்பல்களை அணிதிரட்டிக் கொள்ளும்.

சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜ கட்சிகளின் தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளினதும் வேலைத்திட்டங்களின் பங்காளிகளாகியுள்ளனர். வடக்கு—கிழக்கு—தெற்கு மாகாணங்களில் பொதுமக்களைக் குழப்பியடிக்கத் தம்மால் ஆனதையெல்லாம் இத்தலைவர்கள் செய்கின்றார்கள். 1987 இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்கும், இராணுவ ஆக்கிரமிப்புக்கும் ஆதரவளித்த இவர்கள், 1990ல் பிரேமதாச அரசாங்கம் புதிய மட்டத்தில் ஆரம்பித்த இனவாத யுத்தத்துக்கு முழு ஆதரவு வழங்கினர், இன்று யூ. என்.பி. அரசாங்கத்தின் கைத்தேங்காயாகச் செயற்படும் தெரிவுக் குழுவின் பிரதிநிதிகளாக சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் செயற்படுகின்றனர்.

வடக்குக்—கிழக்கு மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளைக் காப்பதும் இனவாத யுத்தத்தினை நிறுத்துவதும் ஏகாதிபத்திய இராணுவத் தலையீடுகளைத் தவிர்ப்பதுடனும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளிடம் இருந்து பாதுகாப்புப் பெறுவதுடனும் இணைந்து, தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் முன் நிலையில் தோன்றியுள்ளது. தேசிய முதலாளிகள் எனப்படுவோர் நிதி மூலதனத்துடன் நெருக்கமாக இணைந்த சொம்பிரதோர்களாகி உள்ளனர்.

## இனவாத யுத்தத்தில் இருந்து விடுபட ஒரே வழி

ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு ஏஜன்சிகளுக்கும் எதிராக அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்துடன் இணைந்து நடாத்தும் போராட்டத்தின் மூலமே தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் இனவாத யுத்தத்தில் இருந்து மீட்சி பெறமுடியும் என்பது தீவின் கடந்த 10 ஆண்டுகால இனவாத யுத்தத்தின் இரத்தம் தோய்ந்த படிப்பினையாகும். அவ்வாறே தென் மாகாணங்களின் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இனவாத யுத்தத்தினை எதிர்த்து வடக்கு—கிழக்கு தொழிலாளர்களுடன் ஒன்றிணைந்து அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தினைக் கட்டியெழுப்புவதன் மூலமே யூஎன்பி. தாக்குதலுக்கு எதிராகப் போராட முடியும் என்பது இந்தப் 10ஆண்டுகாலப் படிப்பினையாகும்.

இந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளின் பிற்போக்கு கொடுக்கல் வாங்கல்களுக்கும் விஜேதுங்க அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கும் எதிராக வடக்கு—கிழக்கு—தெற்கு மாகாணங்களில் தொழிலாளர்கள்

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து காடர் பக்டரி தீ: முதலாளித்துவத்துக்கு எதிரான குற்றச்சாட்டு

அவுஸ்திரேலிய ட்ரொட்ஸ்கிச வார இதழான 'வேர்க்கஸ் நியூசின்' சைத்தொழில், அனைத்துலக செய்தி ஆசிரியர்களான பீட்டர் சைமன்சும் றிச்சட் பிலிப்சும் பாங்கொக்கில் இருந்தும் அனிப்பிய சிறப்புச் செய்தி அறிக்கையை தழுவியது.



தீயில் வெந்த காடர் பக்டரி அழிபாடுகள்

200க்கு அதிகமான தொழிலாளர்களின் உயிர்களைப் பலி கொண்ட தாய்லாந்து காடர் இன்டஸ்ரியல் விளையாட்டுப் பொருள் பக்டரித் தீயானது தொழிலாளர்கள், தொழிலாளர்களின் உறவினர்கள், மத்திய தர வர்க்கத் தட்டினரிடையே பெரும் ஆத்திரத்தினைத் தூண்டிவிட்டுள்ளது.

வரலாற்றில் முன்னொரு போதும் இடம் பெறாத கொடூரமான உயிர்ப்பலி இடம் பெற்ற பக்டரி பூமியைத் தரிசிக்கவென தினமும் நூற்றுக் கணக்கான தொழிலாளர்களும், அவர்களின் குடும்பங்களும் காடர் பக்டரி எதிரில் குவிந்த வண்ணம் உள்ளனர். சிலர் ஒதுக்குப்புறமான இடங்களில் இருந்து பலநாள் புகையிரத பயணத்தின் பின்னர் அங்கு வந்து சேர்ந்துள்ளனர்.

தாய்லாந்தின் ஊழிய அடிமை முகாம்களிலும் பக்டரிகளிலும் தினமும் இடம் பெற்று வரும் ஏனைய விபத்துக்கள், காயங்கள், மரணங்களைப் போலன்றி 200க்கு அதிகமான தொழிலாளர்களின் உயிர்களைப் பலிகொண்டா இந்தப் பக்டரித் தீ, தாய்லாந்து தொழிலாளர்களின் உணர்வுகளைத் தட்டிவிட்டுள்ளது; எந்த விதத்திலும் அவர்கள் தட்டிக் கழிக்க முடியாத ஒரு விடயம் ஆகியுள்ளது.

தீயினால் இறந்தவர்களதும் காயமடைந்தவர்களதும் படங்களைத் தாங்கிய பல்வேறு ஜனரஞ்சக சஞ்சிகைகளும் பாங்கொக் பத்திரிகை ஸ்ராண்டுகளில் விற்பனையாகிக் கொண்டுள்ளன. ஆங்கில மொழி 'பாங்கோக்போஸ்ட்', 'நேஷன்' உட்பட முக்கிய முதலாளித்துவப் பத்திரிகைகள் தீ பற்றிய பல்வேறு தகவல்கள், பொலிஸ் விசாரணைகள், அரசாங்க அறிக்கைகளுடனும் வெளிவந்துள்ளன.

காடர் பக்டரித் தொழிலாளர்கள், அவர்களின் குடும்பத்தினருடன் இடம்பெற்ற பல பேட்டிகளும் அவற்றில் பிரசுரமாகின. உலகின் எந்தவொரு இடத்திலும் முதலாளித்துவ தொடர்புச் சாதனங்கள் இங்ஙனம் செய்வது பெரும் அரிது. காணாமற் போன ஒரு தொழிலாளியின் குடும்பத்தினருடன் இடம் பெற்ற ஒரு பேட்டி மே 24ம் திகதி நேஷன் பத்திரிகையில் வெளியாகியது. காணாமற் போன 121 பேரில் ஒருவரான 19 வயது பிரனாபா பம்குன் டொட்டின் மாமியாவ பியுன் ஓம்னோக், 6 நாட்கள் கழிந்ததன் பின்னர் சடலங்களைத் தேடும் முயற்சியை நிறுத்திக் கொண்ட அரசாங்கத்தின தீர்மானத்தைக் கண்டனம் செய்துள்ளார். 'எமது சந்தேகங்களும் சபலங்களும் நீங்கும் வகையில் அவர்கள் (தீமூண்ட) இடத்தின் இடிபாடுகள் அனைத்தையும் அப்புறப்படுத்தி சுத்திகரிக்க வேண்டும்' என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப் பியுனும் காடர் பக்டரியில் தொழில் புரிந்தவர். 1990ல் தீமூண்ட வேளையில் பக்டரியில் இருந்து வெளியே தப்பி ஓடுகையில் இடறி வீழ்ந்ததால் அவளின் கருச்சிதைவுற்றுப் போயிற்று. அவளுக்குக் காடர் நிர்வாகம் எதுவித தமான நஷ்டஈடும் வழங்க மறுப்புத் தெரிவித்தது. இதைத் தொடர்ந்து அவள் தொழிலில் இருந்து இராஜினாமா செய்து கொண்டாள்.

''நாம் உயர் கல்வி கற்றோர் அல்ல. எமக்கு சட்டம் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் நாம் எமது உரிமைகளுக்காகப் போராடுகின்றோம் எமக்கு அவளின் பிரனாபாவின் சடலம் கிடைக்க வேண்டும், அத்தோடு நஷ்டஈடும் கிடைக்க வேண்டும்'' என பியுன் கூறினார்.

முதலாளித்துவப் பத்திரிகைகள் இத்தகைய பேட்டிகளைப் பிரசுரிக்கக் காரணம் அவர்களுக்கு தொழிலாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினை மீதான அக்கறை அல்ல. மாறாக இந்த மிலேச்ச வேலை நிலைமைகளுக்கு எதிரான தாய்லாந்து தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடையே ஏற்பட்டுள்ள வெடிப்பின் விளைவுகளையிட்டு அவர்கள் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர் என்பதே.

வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் இப்பிரச்சாரங்கள் உண்மையில் பிரதமர் சுவான் லிக்பாயியின் அரசாங்கம், அரசாங்க அதிகாரிகள், காடர் கம்பனி பொலிசார் தீவிரமாகச் செய்து வரும் மாபெரும் மூடிமறைப்பு இயக்கத்தின் ஒரு பாகமாகும். அரசாங்கச் சார்பற்ற அமைப்புக்களும் 22 தொழிற்சங்க குழுவும் காடர் தொழிலாளர்களுக்கும் இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் உதவும் பொருட்டு ஒரு கமிட்டியை நிறுவியுள்ளன. தீயின் பின்னர் நிறுவப்பட்டுள்ள ஒரு பாராளுமன்றக் குழுவிடம் ஒரு தொகைக் கோரிக்கைகளை முன்வைக்கத் தாம் மேலும் சிலருடன் சென்றதாக மேற் சொன்ன தொழிற்சங்க கமிட்டியின் அங்கத்தவரான கலாநிதி வோபித் சாரோஎன்லோஎட் நிருபர்கள் குழுவிடம் குறிப்பிட்டார்.

'அது மிகவும் வினோதமானது. தொழில் திணைக்களம் பக்டரி சொந்தக்காரன், பொலிசார் கூடுதலாகவோ குறைவாகவோ ஒன்றிணைந்து

(11ம் பக்கம் பார்க்க)

# சு. வ. வ. தொழிலாளி மரணத்துக்கு பக்டரி தவறே காரணம்

## மரண விசாரணையில் மஜிஸ்திறேட் தீர்ப்பு

கட்டுநாயக்க ' சுதந்திர வர்த்தக வலய கொறியன்—சிலோன் கம்பனியின் பக்டரி தொழிலாளியான பிரேமலால் ஜயக்கொடியின் மரணத்துக்கு பக்டரி தவறே காரணமென நீர்கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற மரண விசாரணையில் மஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

மே 26ம் திகதி இடம்பெற்ற தொழிலாளியின் மரணத்தின் 10 நாட்களின் பின்னர்—ஜூன் 5ம் திகதியே மரண விசாரணை நடைபெற்றது. இலங்கையில் சாதாரணமாக சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு மஜிஸ்திரேட் அல்லது மரண விசாரணை அதிகாரி சென்று விசாரணை செய்வதே வழக்கம். ஆனால் இந்த ஜயக்கொடியின் மரணத்தில் அங்ஙனம் நடைபெறவில்லை. சுதந்திர வர்த்தக வலயங்கள் பன்னாட்டுக் கம்பனிகள் தாம் நினைத்த விதத்தில் தொழிலாளியின் இரத்தத்தினை உறிஞ்சிக் குடிக்கும் களங்களாக விளங்குகின்றன என்பதற்கு இது சாட்சி பகர்கின்றது.

இயந்திரத்துக்குள் சிக்கி மரணமான பிரேமலாலின் சடலத்தை அதில் இருந்து வெளியே எடுத்த தொழிலாளியை இம் மரண விசாரணையில் பங்கு கொள்ளாது பார்த்துக் கொள்வதில் பொலிசாரும் பக்டரி நிர்வாகிகளும் கவனமாக இருந்தனர். பக்டரியின் சார்பில் இவ்விசாரணையில் ஆளணி முகாமையாளர் நொயெல் பெரோவும் மேற்பார்வையாளர் திசாநாயக்காவும் கலந்து கொண்டனர். தொழிலாளர்களில் இருந்து பிரேமலாலின் இயந்திரத்துக்கு அருகில் தொழில் புரியும் தமரா, ராலஹாமி என்போர் அழைக்கப்பட்டிருந்தனர், பிரேமலால் மரணமான அன்று அவரை இந்த பழுதடைந்து கிடந்த இயந்திரத்தில் வேலைக்கு அமர்த்திய மேற்பார்வையாளர் இன்னமும் வேலைக்கு வரவில்லை என ஆளணி முகாமையாளர் நொயெல் பெரேரா தெரிவித்தார்.

பிரேமலால் சேவையில் ஈடுபட்ட இயந்திரம் பழுதடைந்து கிடந்தது என்பதை கம்பனி நிர்வாகம் மரண விசாரணையில் ஒப்புக் கொண்டது. ''உயிரை நாசமாக்கி விட்டு குற்றத்தைப் பணத்தால் காப்பாற்ற முயற்சிக்கப்படுகின்றது. இன்று இறந்த ஆளின் சார்பில் பேச இருப்பது நான் மட்டுமே' என மஜிஸ்திரேட் குறிப்பிட்டார். நீங்கள் விரும்பினால் கம்பனியிடமிருந்து நேரடியாக நஷ்டஈடு பெற்றுக் கொள்ளலாம். இல்லையேல் வழக்கு வைத்து நஷ்டஈடு பெறலாம் என மஜிஸ்திரேட் பிரேமலாலின் தந்தைக்கும் மனைவியான கல்யாணிகுமாரிக்கும் கூறினார்.

இந்த மரண விசாரணையில் பிரேமலாலின் மனைவி, தந்தை ஆகியோரின் கருத்துக்கள் விசாரிக்கப்படவில்லை. பக்டரியின் தவறினால் மரணம் நேரிட்டதாக மரண விசாரணையில் தீர்ப்புக் கூறப்பட்டது. பக்டரி நஷ்டஈடு வழங்கும் என ஆளணி முகாமையாளர் பிரேமலாலின் உறவினரிடம் கூறிய போதிலும் அந்த நஷ்டஈடு எவ்வளவு என்று கூறவில்லை. பிரேமலாலின் தந்தையும், மனைவியும் பக்டரிக்குச் சென்ற போது அவர்கள் தொழிலாளர்களுடன் கதைக்க இடமளியாமல் மேற்பார்வையாளர்களால் சுற்றி வளைக்கப்பட்டு பக்டரிக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டதாக தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை'யிடம் தெரிவித்தனர்.

பிரேமலால் ஜயக்கொடி கொலையுண்டதைத் தொடர்ந்து சுதந்திர வர்த்தக வலயத்தின முழு நிலைமையினையும் ஆராயவும் அதற்கு எதிராகப் போராடவும் சுயாதீனமான தொழிலாளர் விசாரணைக் குழுவை நிறுவுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அழைப்பு விடுத்துள்ளது. ஜயக்கொடியின் மரணத்தின் பினனணியாக உள்ளது கொரியன்—சிலோன் கம்பனியின் இலாப வேட்டையே, இதனாலேயே ஜயக்கொடியின உயிரையிட்டு எதுவித அக்கறையும் இல்லாமல பழுதடைந்துகிடந்த இயந்திரத்தில் அவர் வேலைக்கு அமர்த்தப்பட்டார். இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயங்களின உள்ளும் அனைத்துலக ரீதியிலும தொழிலாளர்களை ஐக்கியப் படுத்தும் போராட்டம் அவசியம், இதற்கு இந்த சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழுவின் நடவடிக்கைகள் நல்ல ஆரம்பமாக விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியாவில் சிகானுக்கு வரையறையற்ற புதிய அதிகாரங்கள்

கம்போடியாவில் ஜூன் முற்பகுதியில் நடைபெற்ற ஐ. நா. கண்காணிப்பிலான தேர்தலில் 120 அங்கத்தினர்களைக் கொண்ட பல கட்சி அரசியலமைப்புச் சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்த அரசியலமைப்புச் சபை இளவரசர் நோரோடம் சிகானுக்கை கம்போடிய அரசின் தலைவராக நியமனம் செய்ததோடு அவருக்கு வரையறையற்ற அதிகாரங்களையும் வழங்கியுள்ளது.

சர்வ அதிகாரங்களும் கொண்ட ஒரு மன்னரை நியமிக்கும் முறையில் இந்த பிரேரணை கூறியதாவது: சிகானுக் 'அரச தலைவர் என்ற முறையில் அவரின் அந்தஸ்துக்கும் கடமைகளுக்கும அவசியமான விதத்தில் பூரணமானதும் விசேடமானதுமான அதிகாரங்களைக் கொண்டிருப்பார். அதன் மூலம் அவர் எமது தேசத்தை சமாதான, சுபீட்ச பாதையில் இட்டுச் செல்வார்'' என்றது.

கம்போடியன் மக்கள் கட்சி (CPP) தேர்தலில் தோல்வி கண்டதைத் தொடர்ந்து அதன் தலைவர் பிரதமர் ஹுன் சென் இந்த அரசியலமைப்புச் சபையை பகிஸ்கரிக்கப் போவதாக மிரட்டியிருந்தார். தேர்தல் 'முறைகேடுகள்' பற்றி விசாரணை நடாத்தப்படவேண்டும் எனவும் புதிய தேர்தல் நடாத்தப்பட வேண்டும் எனவும் க. ம. க. கேட்டிருந்தது.

ஏகாதிபத்திய வல்லரசுகள் கம்போடியாவுக்கான நிதியுதவிகளை நிறுத்திக் கொள்ளப் போவதாக மிரட்டியதுதான் தாமதம் க.ம.க. தலைவர்கள் தமது கோரிக்கைகளைக் கைவிட்டு. அரசியலமைப்புச் சபையில் இடம் பிடித்துக் கொண்டனர். இளவரசர் சிகானுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரங்கள் 'அமைதியை' புனருத்தாரனம் செய்யவும் 'நாட்டை ஸ்திரப்படுத்தவும்' அத்தியாவசியமானவை எனவும் க.ம.க, தலைவர்கள் கூறினர். அரசியலமைப்புச் சபையின் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசிய சிகானூக் இது 'கம்போடியாவில் லிபரல் ஜனநாயகத்தின் புதிய சகாப்தத்தினை ஆரம்பித்து வைக்கும்' என்றார்.

ஐ. நா. தேர்தலும், சிகானூக் அரசின் தலைவராக இருத்தப்பட்டமையும் கம்போடிய மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காப்பதைக் குறிக்கமாட்டாது. ஐ. நா. வின் செயற்பாடுகள் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு மனமுவந்து கதவுகளைத் திறந்துவிடும் ஒரு அரசியல் ஆட்சியாளர்களை இருத்துவதையே நோக்கமாகக் கொண்டது.

தேர்தல் வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே சிக னூக் ஏகாதிபத்திய வல்லரசு ளின் ஆதரவுடன் தம்மை அரசின் தலைவராகவும், பிரதமராயும், ஆயுதப் படைகளின் தளபதியாகவும் அறிவித்துக் கொண்டார். தமது அதிகாரத்தினை மேலும் வலுப்படுத்தும் முறையில் சிகானூக் முடியரசு பன்சின்பெக் கட்சியின் தலைவரும் மகனுமான இளவரசர் நனசிட்டை பிரதமராகவும் க.ம.க. தலைவர் ஹுன் சென்னைப் புதிய கூட்டரசாங்கத்தின் பிரதி பிரதமராகவும் பிரேரித்தார்.

பன்சின் பெக் கட்சியினுள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் இருந்தும் ஏற்பட்ட எதிர்ப்பினால் இந்த மன்னராட்சி சதி தகர்ந்து போயிற்று. ஆனால் ஐ. நா. பேச்சாளர் 'கம்போடியாவில் இளவரசர் வகிக்கும் பாத்திரத்தினை' ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிப்பதாக பிரகடனம் செய்தார். இது அரசியலமைப்புச் சபையின தீர்மானங்களுக்கான ஐ நா. வின் அங்கீகாரத்தை எடுத்துக் காட்டியது. இளவரசர் சிகானுக் முதலில் யப்பானியர்களதும், பின்னர் பிரான்சினதும் அதைத் தொடர்ந்து அமெரிக்காவினதும் கையாளாகவும் ஈவிரக்கமற்ற சர்வாதிகாரியாகவும் விளங்கி, ஒரு இரத்தம் தோய்ந்த நீண்ட வரலாறு படைத்தவன்,

சிகானூக் பன்சிபெக் கட்சியையும் க.ம.க. யையும் கொண்ட ஒரு அரசாங்கத்தினை நிறுவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளான். இவ்விரு கட்சிகளும் ஐ.நா. திட்டத்துக்கு அமைய ஒரு அரசியலமைப்பு சட்டத்தினை வரையும் ஒரு இடைக்கால அரசாங்கத்தினை (மூன்று மாதத்தில்) அமைக்க இணங்கியுள்ளன.

கம்போடியாவில் உள்ள எந்தவொரு அரசியல் குழுவும்—தேர்தலைப் பகிஷ்கரித்த கேமர் ஹவுஜ் உட்பட—வறிய கம்போடிய நலன்களைக் காப்பதாய் இல்லை. இவை அனைத்துமே கம்போடியாவையும் முழு இந்தோசீனத்தையும் சுரண்டும் பல்வேறு ஏகாதிபத்திய வல்லரசுகளின் தரகர்களாக சேவை செய்யவே துடிக்கின்றன. இந்த இலக்கிலேயே அவர்கள் புதிய ஆட்சியில் பதவிகளைக் கைப்பற்றப் போட்டியிட்டு வருகின்றனர்,

## தொண்டமான் ஏகாதிபத்தி..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இதனால் தமது நலன்களுக்கும் அடிவிழும் என்பது அவர் அறியாததல்ல.

தோட்டத் தொழிலாளர்கள் தம்முன்னால் உள்ள ஆபத்தினைப் புரிந்து கொண்டாக வேண்டும் தோட்டங்களில் வர்க்க நனவு படைத்த தொழிலாளர்களும் இளைஞர்களும் தொண்டமானின் இதொகா தலைமையையும் மற்றும் தலைமைகளையும் துடைத்துக் கட்டும் அரசியலிப் இறங்க வேண்டும். தொண்டமான் ஒரு முதலாளித்துவ தலைவர். தொழிற் சங்கங்களுள் முதலாளிகளாக தொழிலாளர்களைச் . சுரண்டிவரும் தலைமை. தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தில் இருந்து சுயாதீனமான முறையில் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படை யில் அணிதிரள்வது அவசியம். தோட்டத்துறையின் நிஜ நிலைமையைக் காட்டும் கண்ணாடி மாகாணசபைத் தேர்தல் அல்ல; அதற்கு முன்கூட்டியே குழப்ப நிலைமைக்கிடையேயும் தொழிலாளர் குதித்த வேலைநிறுத்தப் போராட்டங்களே. தோட்டத் தொழிலாளர்களின் தீர்க்கமான போராட்டங்களுக்கானநிலைமைகள் உருவாகி உள்ளன, எதிர்வரும நாட்களில் தொடுக்கப்படும் தாக்குதல்கள் மூலம் இந்நிலைமை மேலும் அபிவிருத்தி பெறுவது திண்ணம், நனவான தொழிலாளர்களும் இளைஞர்களும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துள் அணிதிரள்வதன் மூலம் இப் போராட்டங்களில் இருந்து துரோகிகளை துரத்தியடித்து, புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்பத் தயாராக வேண்டும்.

## விஜேதுங்க அரசா...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி, தமிழீழம்—இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்தினை ஆட்சிக்குக் கொணர்வதே தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் முன்னுள்ள ஒரே நிஜ வேலைத் திட்டமாகும்.

இனவாத யுத்தம் வேண்டாம்! யுத்தத்துக்கு ஒரு ஆளோ, ஒரு சதமோ, ஒரு கருவியோ வழங்காதே! இலங்கை படைகளை வடக்கு...... கிழக்கில் இருந்து வெளியேற்று! இனவாத வேட்டையை நிறுத்து! என்ற தீர்க்கமான பிரச்சாரத்தில் ஈடுபடுவதன் மூலம் இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் வடக்கு—கிழக்கு மாகாணங்களின் தொழிலாளர் வர்க்கத்துடன் மேற்சொன்ன வேலைத் திட்டத்துக்கான போராட்ட ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முன்சென்றாக வேண்டும் அவ்வாறே தமிழீழம் பிராந்தியங்களில் விடுதலைப் புலிகளதும் மற்றும் தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களதும் ஜனநாயக உரிமைகளைத் தவிடுபொடியாக்கும் நடவடிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரத்தினை முன்னெடுப்பதன் மூலம் முதலாளித்துவ வர்க்க எதிரிக்கு எதிராகப் போராடும் தமது சொந்த அமைப்புக்களாக நடவடிக்கைக் கமிட்டிகளையும் சோவியத் சபைகளையும் கட்டி எழுப்பப் போராடுமாறு அப்பிரதேசங்களைச் சேர்ந்த தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை நாம் வேண்டுகின்றோம்.

இப்போராட்டத்துக்கு அனைத்துலகவாதப் புரட்சிகரத் தலைமை அவசியம். அது இந்த வேலைத்திட்டத்தினை முன்வைத்துப் போராடிவரும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமாகும். இலங்கையையும் தமிழீழத்தையும் தழுவிய விதத்தில் இக்கட்சியைக் கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறு வர்க்க நனவு கொண்ட சகல தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர்களையும் நாம் வேண்டுகின்றோம்.


# தொழிலாளர் பாதை
## சந்தாதாரர் ஆகுங்கள்

அஞ்சல் கட்டணம் உட்பட ''தொழிலாளர் பாதை''
சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 8/-   3 மாதம் — ரூபா 24/-
6 மாதம் — ரூபா 48/-   1 வருடம் — ரூபா 96/-

பெயர்:.........................................................

முகவரி:.........................................................

சந்தாக் காலம்:......... ரூபா......... சதம்.........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''

90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-1.0


## தாய்லாந்து காடர் பக்டரி தீ:
## முதலாளித்துவத்துக்கு...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்படும் விதம் தெரிகின்றது' என அவர் குறிப்பிட்டார்.

தீ இடம்பெற்ற இரண்டு நாட்களின் பின்னர் (மே 12 பொலிஸ் தொழில் நுட்ப பிரிவின் ஆணையாளர் தீயுக்குக் காரணம் தீ மூட்டப்பட்டதே என்றுள்ளார். ''கம்பனி, பிறிதோர் கம்பனியிடம் பக்டரியை 700 மில்லியன் பாட்டுக்கு (26மில்லியன் டாலர்கள்) காப்புறுதி செய்திருந்ததால் இச்சமயத்தில் தீ மூட்டல் [illegible] றுள்ளார். உண்மையில் பக்டரி 1பில்லியன் பாட்டுக்கும் கூடுதலாக காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. கம்பனி வங்ரோத்துஅடைந்திருந்ததாயும் அவர்களின் விளையாட்டுப் பொருள் உற்பத்தியை பெரிதும் இலாபகரமான வேறோர் இடத்துக்கு—அவர்கள் அநேக பக்டரிகளைக் கொண்டுள்ள தென் சீனாவாக இது இருக்கலாம்—மாற்றவும் அவர்கள் ஆலோசித்து வந்ததாயும் தெரிகிறது.

— தொடரும்


வரசியுங்கள்!

# சோவியத் யூனியனின் முடிவு

டேவிட் நோர்த்

விலை 25-00

கிடைக்குமிடம்-
90, 1வது
மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு - 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி ஊழியர் சங்க தேர்தலில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வெற்றி

ஜூன் 24ம் திகதி நடைபெற்ற மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தலில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக குழு முக்கிய பதவிகள் பலவற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்க அனைத்துலக வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு நடாத்தி வரும் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். அவ்வாறே அது ஏர்ணஸ்ட் மண்டேலின் பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் இலங்கை ஏஜன்சியான நவசமசமாஜ கட்சியின் முதலாளித்துவ வேலைத் திட்டத்துசகுக் கிடைத்த அடியாகும். கடந்த மூன்று ஆண்டுகளாக அதிகாரத்தில் இருந்து வந்த நவசமசமாஜ—சி.ல.சு.க. கும்பல் இத்தேர்தலில் தோல்வி கண்டுள்ளது.

பு. க. க. மத்திய குழு உறுப்பினரும் நான்காம் அகிலத்தின் அனைத்துல்கக் குழுவின் அனைத்துலகத் தொழிலாளர் பாதுகாப்பு சமிட்டி அங்கத்தவருமான எச். எம். பீ. ஹேரத் இத்தேர்தலில் ம. வ. ஊ. ச. பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இப்பதவியில் இருந்து வந்த நவசமசமாஜக் கட்சி மத்திய குழு உறுப்பினரான சே. தோ. கருணாரத்ன என்பவர் தோல்வியை தழுவிக் கொண்டுள்ளார். பு. க. க. அங்கத்தவர்களான எச்.பலங்கசிங்க உப—தலைவர் பதவிக்கும் ஜெரானி ரத்நாயக்க செயற்குழுவுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மத்திய வங்கி நிர்வாகத்தின் வேட்டைக்கு இலக்காகி வேலை நீக்கம் செய்யப்பட்ட பு.க.க. மத்திய குழு உறுப்பினரான நிஹிஷ' னுக்கு197 வாக்குகள் கிடைத்தன. ஏனைய பு.க.க, உறுப்பினர்கள் 200க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

நவசமசமாஜ தொழிற் சங்க அதிகாரிகள் ம.வ.ஊ' சங்கத்தை மத்திய வங்கி நிர்வாகத்தின் தொழில் உறவு அலுவலகமாக மாற்றி நடாத்தி வந்த கோபரேட்வாத' வேலைத் திட்டத்துக்கு எதிராக பு. க. க. நடாத்தி நீண்ட காலப் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியே இதுவாகும். நவசமசமாஜ துரோகிகளைஅம்பலப்படுத்தி பு.க.க. வெளியிட்ட துண்டுப் பிரசுரம் கூறியதாவது:

''சே, தோ. கருணாரத்ன நவசமசமாஜ கட்சியின் மத்திய குழு உறுப்பினர். நவசமசமாஜ கட்சியை, அதன் தலைவர்கள் முதலாளித்துவ அரசியல் கட்சிகள், முதலாளிகள் இராணுவத் தலைவர்களுடன் தோளில் கை போட்ட முதலாளித்துவக் கட்சியாக்கியுள்ளனர். பிரேமதாச முதலாளித்துவ சி. ல. சு. க. கைக்கூலி. அவர்கள் 'உலக சோசலிசப் புரட்சி''இலங்கையில் சோசலிசப் புரட்சி' பற்றியும் 'தொழிற் சங்கம் ஒன்றில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கருவியாக வேண்டும் இல்லையேல் முதலாளித்துவ அரசின் ஆயுதமாக வேண்டும்' என நாம் கூறுவதையிட்டு குரோதத்தை கக்குகின்றனர், இது புதுமையல்ல. பன்னாட்டுக் கம்பனிக் காரர்களின் சுரண்டல், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் முதலான பிற்போக்கு அமைப்புக்களின் கட்டளைகள், அவற்றை நடைமுறைப்படுத்தும் யூஎன்பி அரசாங்கத்தின் முன் நிலையில் தொழிற்சங்கத் தலைவர்கள் ஸ்தம்பித்து போயுள்ளனர். அத்தோடு அவர்கள் இந்தச் சகல அமைப்புக்களதும் தாக்குதல்களுக்கும் முன்னுரிமை கொடுக்கிறார்கள். கருணாரத்ன—பிரேமதாச பேர்வழிகள் இவ்விதத்திலேயே செயற்படுகின்றனர்.'' என்றது.

# சோசலிச அனைத்துலக...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் புகழ் பெற்ற 25 ஆண்டு கால போராட்ட வரலாற்றைக் கொண்டுள்ள போதிலும் நாம் இன்னமும் வெற்றி கொள்ள வேண்டியவை நிறைய இருப்பதாகவும் விஜே, மேலும் குறிப்பிட்டார்,

கூட்டத்துக்கு தலைமை தாங்கிப் பேசிய 'கம்கறு மாவத்த' ஆசிரியர் கே. ரத்னாயக்க 'புரட்சிகர மார்க்சிசத்துக்காக கடந்த 25 ஆண்டுகளாக பு.க.க, வினால் தொடர்ந்து போராட முடிந்ததற்கும் அந்த பதாகையுடன் இன்று கிளர்ந்து எழ முடிந்துள்ளதற்கும் காரணம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையாக ஆரம்பிக்கப்பட்டு அந்த அத்திவாரத்தில் போராட்டத்தினை நடாத்தி வருவதேயாகும்' என்றார்.

பு.க:க. இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்டுகள் இயக்கத் தேசியச் செயலாளர் தோழர், தீபால் ஜயசேகரவும் இக்கூட்டத்தில் உரையாற்றினார்.

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அபிவிருத்தி நிதி

### ரூ, 500,000

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25வது ஆண்டு நிறைவையொட்டி ஆரம்பிக்கப்பட்டுள்ள ரூ, 5 இலட்சம் நிதிக்கு இதுவரை ரூ. 450,000/- திரண்டுள்ளது. ஸ்டாலினிச, சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களுக்கும் அவர்களின் பப்லோவாத கையாட்களுக்கும் சகல வகையறாவைச் சேர்ந்த தேசியவாத சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராக முதலாளி வர்க்கப் புரட்சித் தலைமையை கட்டியெழுப்பும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் போராட்டத்துக்கு 25 ஆண்டுகள் பூர்த்தி அடைகின்றது. ஆதலால் இந்த ஆண்டினுள் பல முக்கிய அரசியல் இலக்குகளை அடையத் திட்டமிட்டுள்ளதாக நாம் ஜனவரியில் அறிவித்திருந்தோம். 'தொழிலாளர் பாதை'யை 12 பக்கங்களாகவும் 'கம்கறு மாவத்த'வை 16 பக்கங்களாகவும் விஸ்தரிக்கவும் லியொன் ட்ரொட்ஸ்கியின் நூல்கள் உட்பட முக்கிய பல மார்க்சிசப் படைப்புக்களை தமிழிலும், சிங்களத்திலும் வெளியிடவும், பரந்த அளவில் கூட்டங்கள். கண்காட்சிகள் நடாத்தவும் இந்த அபிவிருத்தி நிதி கைகொடுக்கும்.

உலகப் பொருளாதார வீழ்ச்சி உக்கிரம் கண்டு, ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான கெடுபிடி வர்த்தக யுத்தம் மூன்றாம் உலக யுத்த திசையில் வளர்ச்சி காணும் ஆபத்து தலைநீட்டியுள்ளது. இதனை ஏகாதிபத்தியத்தினை துடைத்துக் கட்டும் முன்நோக்கின் அடிப்படையில் மட்டுமே தோற்கடிக்க முடியும். இந்த இலக்கில் நான்காம் அகிலம் மட்டுமே போராடுகின்றது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் இந்தியத் தோழமை இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகமுமே இந்தியத் துணைக் கண்டத்தில் இந்த அனைத்துலகப் போராட்டத்துக்கு தோள் கொடுக்கின்றன. முகலாளித்துவ வேலைத் திட்டத்தின் அபபட்டமான வக்கீல்களாக நின்றுவரும் சமசமாஜ,கம்யூனிச, நவசமசமாஜ, இதொகா துரோகிகளுக்கு எதிராகத் தொழிலாளர், ஒடுக்கப்படுவோர், இளைஞர்களிடையே மார்க்சிச நனவினை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதே பு.க.க. வின் பிரதான இலக்காக உள்ளது,

ஆதால் தோழர்களே எமது அரசியல் இலக்கினை வென்றெடுக்க தங்கள் உதவியை காலந்தாழ்த்தாது கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:
ஆனந்த வக்கும்புர,
90, 1வது மாளிகாசந்த ஒழுங்கை,
மருதானை,
கொழும்பு—10

**வாசியுங்கள்:**

**இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?**




விலை: ரூபா. 7–00

**பேர்ளின் உலகத் தொழிலாளர் மாநாட்டு விஞ்ஞாபனம்**

**ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!**

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்)

விலை– ரூபா 20

**வாசியுங்கள்!**

**நான்காம் அகிலத்தின் ஸ்தாபக வேலைத்திட்டம்:**

முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

**இடைமருவு வேலைத் திட்டம்**

விலை: ரூபா 20.

தொடர்புகள்: ஆனந்தவக்கும்புர,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10

கொழும்பு – 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org